வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 15.06.2022 புதன்கிழமை இதழ் : 191 பக்கங்கள் : 16

## உண்மைகளை சிங்கள மக்களும் விளங்கி தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கவேண்டும்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை



மட்டக்களப்பு, ஜூன். 15

சொந்த தேசத்தினை சூறையாடி தங்களுக்கான நலன் களை மட்டும் தேடிய தலைமைத்துவங்கள் 74 வருடங் களுக்கு பின்னர் அம்பலப் படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த உண்மைகளை சாதாரண சிங்கள மக்கள் விளங்கிக் கொண்டு தமிழ்த் தேசத்தினை அங்கீகரிக்கவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, படுவான்கரை பகுதியை உலுக்கிய மகிழடித்தீவு படுகொலையினை நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் 15

## எரிபொருள் விலையில் 24ஆம் திகதி திருத்தம்!

கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைய எதிர்வரும் 24ஆம் திகதி எரிபொருட்களின் விலைகள் திருத்தம் ஏற்படுத்தப்படும். இதற்கமைய மின் கட்டணத்தை உயர்த்தவோ குறைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் எம்.பி.டி.யு.கே மாபா பத்திரண தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் உட்பட பல காரணிகளை மீளாய்வு செய்ததன் பின்னர், எரிபொருட்களின் விலைகள் 15 நாட்களுக்கு ஒருமுறை அல்லது மாதம் ஒருமுறை வகுக்கப்பட்ட விலைச் சூத்திரத்துக்கமைவாக மாற்றியமைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கொடிகாமம் விபத்தில் ஒருவர் பலி!




தென்மராட்சி, ஜூன் 15

சைக்கிளில் சென்றவரை கார் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

ஏ-9 வீதி - கொடிகாமம் - கொயிலாமனை சந்தியில் நேற்று பிற்பகல் 15

# பலாலி விமான நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை!

### பிரதமர் ரணில் அதிகாரிகளுக்கு பணிப்பு



கொழும்பு, ஜூன் 15

**இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டு பலாலி விமான நிலைய செயல்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

சுற்றுலாத்துறை அதிகாரிகளுடன் நேற்று செவ்வாய்கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அடுத்த வருடத்தில் 8 இலட்சம் சுற்றுலாத் துறையினரை நாட்டுக்கு வரவழைப்பதற்கு எதிர்பார்க்கிறது. இதன் 15

## அமைச்சரவையில் '21' குறித்து இன்னமும் தீர்மானம் இல்லை!

கொழும்பு, ஜூன். 15

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பான வரைவு நேற்றும் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட போதிலும் அது குறித்துத் தீர்மானிப்பது மீண்டும் அடுத்த வாரத்துக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

நேற்று முன் தினம் அமைச்சரவையிலும் இவ்விடயம் மேலோட்டமாக ஆராயப்பட்டது.

இன்று இது 15

## மேலும் புதிய வரிகளை அறிமுகப்படுத்த திட்டம்!

கொழும்பு, ஜூன் 15

எதிர்காலத்தில் மேலும் சில புதிய வரிகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று விடுத்த விசேட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய எரிபொருள் மற்றும் எரிவாயு நிலைமை தொடர்பில் அவர் விடுத்த 15

## மேலும் 50 கோடி டொலரை கடனாக இந்தியாவிடம் கேட்கிறது இலங்கை

கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் இறக்குமதிக்காக மேலும் 50 கோடி டொலர்களை இந்தியாவிடம் இலங்கை கடனாகக் கோரியுள்ளது.

இந்தியாவின் கடன் வசதி திட்டத்தின் கீழ் 20 கோடி டொலர் கடன் கிடைத்தது. இந்தக் கடனுக்கான எரிபொருளுடன் கப்பல் நாளை மறுதினம் கொழும்பை வந்தடையவுள்ளது.

இந்நிலையி 15

### அதிகரிக்கும் நெருக்கடிகளால்

## நூற்றுக்கணக்கான இலங்கையர் சட்டவிரோதமாக ஆஸி. பயணம்!

சிட்னி, ஜூன் 15

இலங்கை மனிதாபிமான நெருக்கடியின் விளிம்பில் இருக்கும் நிலையில் நூற்றுக்கணக்கானவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத பயணத்தை மேற்கொள்ள தயாராகின்றனர் என ஏ. பி. சி. தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ளதால் 300இற்கும் அதிகமான இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவை அண்மித்துள்ளனர். புதிதாக பதவியேற்ற தொழில் கட்சி அரசாங்கம் அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்கும் என்று கூறியே ஆள்கடத்தல்காரர்கள் செயல்படுகிறார்கள்.

அநேகமான 15

## வெள்ளிக்கிழமை விடுமுறை; இவ்வாரம் முதல் நடைமுறை

கொழும்பு, ஜூன். 15

இந்த வாரத்தில் இருந்து அரச ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் விசேட விடுமுறை வழங்க முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அத்தியாவசிய சேவைத்துறைகளான சுகாதாரம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, கல்வி, பாதுகாப்பு, போக்குவரத்து உள்ளிட்ட துறை சார்ந்தவர்களுக்கு இந்த விடுமுறை பொருந்தாது என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த 3 மாதங்களுக்கு இந்த நடைமுறை அமுலில் இருக்கும்.

வெள்ளிக்கிழமை விசேட விடுமுறையின்போது அரச ஊழியர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய எரிபொருள் பற் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

மீண்டும் சிலர், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். பாராளுமன்றத்தை கலைக்கவேண்டும் என்றால் இன்றைய நிலையில் அதனை ஜனாதிபதியாலும் செய்யமுடியாது.

பாராளுமன்றமே அதுகுறித்து தீர்மானம் எடுக்கவேண்டும். அப்படியொரு நிலைமை வருவதற்கான சாத்தியம் இருப்பதாக தெரியவில்லை. ஆனால், அதுகுறித்து கோரிக்கை வைக்கும் நமது தலைவர்கள் சிலர், அப்படி நடந்தால் தேர்தலை எதிர்கொள்ள தமது கட்சி தயாராக இருக்கின்றதா என்று சிந்திப்பதாக தெரியவில்லை.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட தோல்விக்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்யவேண்டிய அவசியம் இருக்காது. இதுகுறித்து பல தடவை கள் இந்தப் பத்தியில் குறிப்பிட்டாகிவிட்டது.

கட்சியில் சிலரின் தன்னிச்சையான முடிவுகளும், அறிவிப்புக்களுமே முக்கிய காரணமாக இருந்தது. நல்லாட்சி அரசின் காலத்தில் தமக்கிருந்த முக்கியத்துவத்தை சரியாகப் பயன்படுத்துவதற்கு பதிலாக, ரணிலை பிரதமர் பதவியில் தக்கவைப்பதே தமது தலையாய கடமை என்று ஒடித்திரிந்தார்கள். அதற்கு என்ன காரணம் என்பது கட்சிக்குள் இருப்பவர்கள் அறியா ததல்ல.

இப்போது, கூட்டமைப்பு - முக்கியமாக, அதன் முற்றிலுமான அடையாளமாக இருக்கும் சுமந்திரன் என்ன நினைக்கின்றார், என்ன செய்கின்றார் என்பது கட்சியில் யாருக்கும் தெரிந்திருக்குமோ தெரியவில்லை. தலைவர் சம்பந்தனுக்கும் கூடத்தான்.

இன்று, அரசியல் விமர்சகர்கள் என்று - ஒவ்வொரு சம்பவத்திற்கும் பொழிப்பு சொல்கின்ற, கருத்துருவாக்கிகளில் இந்த ஊர்க்குருவி மதிக்கின்ற ஒருசிலரில் 'பனங்காட்டான்' முக்கியமா னவர். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நெருக்கடிகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தனி ஒருவனாக இருந்து ஒரு பத்திரிகையை வெற்றிகரமாக நடாத்தியவர். கடந்த ஞாயிறன்று 'ஈழநாடு'வில் அவர் எழுதிய கட்டுரை ஒன்று ஊர்க்குருவின் கவனத்தைப் பெற்றது.

'பாராளுமன்றத்தை உடனே கலைத்து தேர்தல் நடாத்த வேண்டும் என்று பசில் ராஜபக்ஷ சவால் விடுத்ததும், சொல்லி வைத்தால்போல தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரனும் அதே வேண்டுகோளை விடுக்கின்றார். நல்லாட்சிக் காலத்தில் ரணிலின் உற்ற தோழனாகவிருந்த சுமந்திரன், இன்று அவரை பகிரங்கமாக எதிர்ப்பதோடு நிற்காது, முழுமையாக பசிலின் உற்ற தோழனாக மாறியிருப்பதை அவதானிக்க முடிகின்றது' என்ற பனங்காட்டானின் கருத்து ஆச்சரியமானதல்ல.

இது, நடக்கின்ற சம்பவங்களை உற்றுநோக்குகின்ற ஒவ்வொருவருக்கும் ஏற்படுவதுதான்.

நல்லாட்சி காலத்தில் ஐந்து வருடங்களும் ரணிலுக்கு நேரடி யாக பாதுகாப்பளித்த கூட்டமைப்பு, இப்போது மறைமுகமாக ராஜபக்ஷக்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றதா என்ற கேள்வி, இன்று ஒவ்வொரு தமிழரிடத்திலும் உண்டு.

இந்த ஊர்க்குருவியின் கவலை எல்லாம், கூட்டமைப்பு கடந்த தேர்தலில் இருந்து இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பதே.

கூட்டமைப்பு மீதான அதிருப்தி அலை, அதன் பயனாக மற் றைய தமிழ் தேசியக் கட்சிகளுக்கு வாக்குகளாகினவே தவிர, அக்கட்சிகளுக்கான வாக்குகள் அல்ல அவை என்பதும் ஆய்வுக் குரியதல்ல.

இப்போது, அவர்கள்மீதும் மக்கள் அதிருப்தியிலேயே இருக்கின்றனர் என்பதும், அதுபோன்றே ஆய்வுக்குரியதல்ல. இந்நிலையில், கூட்டமைப்பு தமக்கே அந்த வாக்குகள் மீண்டும் வரும் என்று கணக்குப் போட்டால் அது தப்புக்கணக்காகவே முடியும்.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தான் என்ன சொல்ல வருகின்றார் என்பதை தன்னோடு இருப்பவர்களுக்கே சொல்ல முடியாதவராக இருப்பதாக கூட்டமைப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டியே செய்திகள் வெளிவருகின்றன. இது எதைச் சொல்கின்றது என்றால், கூட்டமைப்பு இன்று மேய்ப்பரில்லாத மந்தைபோல போய்க்கொண்டிருக்கின்றது. அவசரமாக அதற்கு தேவைப்படுவது ஒரு மேய்ப்பரே. இதனைப் புரிந்துகொள்ள வேண்டியவர் முதலில் சம்பந்தனே. ஆனால், அவரோ புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றாரா என்பதே கேள்விக்குரியதாக இருக்கையில், ஆகக் குறைந்தது கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளின் தலைவர்களாவது உடனடியாக கூடிப்பேசி, ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

கூட்டமைப்புக்கான வழிப்பாதை ஒன்று இப்போது அவசியமானது மாத்திரமல்ல, அவசரமானதும் கூட.

- ஊர்க்குருவி

தொல்லியல் திணைக்களத்துக்கு தடை:

# நிரோஷுக்கு எதிரான வழக்கு; இன்று மீண்டும் விசாரணைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் பணிகளுக்கு தடை ஏற்படுத்தினார் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்கள் தடைகளை ஏற்படுத்தினர் எனக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த வருடம் ஏப்ரலில் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் தொல்லியல் திணைக் களத்தின் அரச பணிகளுக்கு தடை ஏற்படுத்தியதாக மேலும் சிலரை இணைக்கவுள்ளதாகவும் மன்றில் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேசசபையின் தலைவர் என்றவகையில் தவிசாளார் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரச கடமைக்கு தடை ஏற்படுத்தியதாகக் கருத முடியாது. நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்னையைக் குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என மன்றில் முன்வைத்தனர்.

தனியாராக இருந்தாலேன்ன அரச தாபனமாக இருந்தாலென்ன பிரதேச சபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தையும் செய்ய முடியும் என்பதும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

அந்த வழக்கை கடந்த வருடம் விசாரித்த நீதிபதி ஏ. ஏ. ஆனந்தராஜா, பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக் கோவையின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகிய வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன், தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன், தொடர்ந்து இவ் வழக்கை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

பிரதேச சபைத் தவிசாளர் இந்த வழக்கில் மேலதிக விசாரணைகள் தேவைப்படின் தவிசாளர் ஒத்துழைக்கவேண்டும் எனவும் தவிசாளர் ஒரு இலட்சம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கும் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மீளவும் இவ் வழக்கிற்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை முதலாவது சந்தேக நபராக அடையாளப்படுத்தி இன்று புதன் கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து கடந்த வருடம் நிலாவரையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் அத்திவாரம் போன்று கிடங்குகளை வெட்டிய நிலையில் அங்கு ஏற்பட்ட கடும் எதிர்ப்புக்களை அடுத்து பொலிஸ் நிலையத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் இணக்கத்தை ஏற்படுத்துதல் என அழைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரிகளினால் தவிசாளர் நிலாவரையில் தலையிடக்கூடாது என வலியுறுத்தப்பட்ட நிலையில் தவிசாளர் அதனை ஏற்க மறுத்திருந்தார். இந்த நிலையிலேயே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான எரிபொருளே நேற்று விநியோகம்!

கொழும்பு, ஜூன் 15

மட்டுப்படுத்தப்பட்டளவு எரிபொருளே நேற்றைய தினம் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டது என்று இலங்கை தனியார் எரிபொருள் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பொதுவாக வெசாக் மற்றும் பொசன் போயா நாட்களில் எரிபொருள் விநியோகம் மேற் கொள்ளப்படுவதில்லை என வும், எனினும் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைய குறிப்பிட்டளவு எரிபொருள் சில்வா தெரிவித்தார்.

தினமும் 350 - 400 வரையான எரிபொருள் பவுசர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நிலையில், நேற்று காலை வரை 30 பவுசர்கள் மட்டுமே கொலன்னாவை இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்திற்கு வந்தன என்றும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் நாடளாவிய ரீதியில் 200இற்கும் குறைவான மையங்களுக்கே எரிபொருள் வழங்கப்பட்டதாகவும், இன்று குறைவான மையங்களுக்கே விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். (ஐ)

# எரிபொருள் பெறுவதற்காக வடமராட்சியில் நீளவரிசை!

வடமராட்சி, ஜூன் 15

நெல்லியடி, கிராம கோடு ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் பெறுவதற்காக இரண்டாவது நாளாகவும் நேற்றும் மக்கள் நீண்டவரிசையில் காத்திருந்தனர்.

கடந்த இரு நாட்களாக வடமராட்சியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இல்லாத நிலையில், நேற்று பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே மக்களின் நீண்ட வரிசையை அவதானிக்க முடிந்ததுடன், நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பிரதேச செயலகம் ஊடாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு அட்டைக்கு ரூபாய் 2,500க்கு பெற்றோல் வழங்கப்பட்டது.



அத்துடன், பிரதேசத்துக்கு வெளியே இருந்து செல்கின்ற அல்லது பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு ரூபாய் 500இற்கு மட்டுமே பெற்றோல் விநியோகம் இடம்பெற்றது.

இதேவேளை, புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு உட்பட்ட கிராமக்கோடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முச்சக்கர வண்டிகளுக்கு ரூபாய் 1500 க்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபாய் ஆயிரத்துக்கு மட்டுமே பெற்றோல் வழங்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
15.06.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆனி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# அமெரிக்க - சீன தூதுவர்கள் சந்திப்பு?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு 18 மாதங்கள் செல்லுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, நாட்டை மீட்பதற்கு வல்லரசுகளின் ஆதரவு தேவையென்றும் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு குறிப்பிட்டிருக்கும் ரணில், இந்திய ஊடகமான்றுக்கு வழங்கிய நேர்காணலில், உதவிகளைப் பெறும் நோக்கில், விரைவில், சீனாவுடன் உரையாடவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார். அதேவேளை பிறிதொரு முக்கிய விடயமொன்றும் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவது தொடர்பில், இலங்கைக்கான சீனத் தூதுவரும், இலங்கைக்கான அமெரிக்க தூதுவரும் நட்பு ரீதியாக கலந்துரையாடிருக்கின்றனர். சீனத் தூதரகத்தின் பக்கம் சென்றால் இந்தியத் தூதரகமும் அமெரிக்க தூதரகமும் தவறாக எண்ணிவிடுவார்களோ - என்று தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அஞ்சிக் கொண்டிருக்கும்போது, அமெரிக்க தூதுவர், சீனத் தூதுவருடன் உரையாடியிருக்கின்றார்.

இது ஒரு முக்கிய விடயமாக நோக்கப்படுகின்றது. அண்மையில், சீன வெளிவிவகார அமைச்சு, இலங்கையின் விடயத்தில், இந்தியாவுடனும், சர்வதேச சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தாம் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்த நிலையில்தான், இந்த சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது. இலங்கை விடயத்தில் அதிக கரிசனையுடன் இருப்பதான தோற்றமொன்றை சீனா வெளிப்படுத்த முயற்சிக்கின்றதா அல்லது, சீனா தனியாக சில விடயங்களை மேற்கொள்வதால் ஏற்படும் புவிசார் அரசியல் பதற்றங்களை தவிர்க்க விரும்புகின்றதா? ஆனால், அனைவரின் கவனமும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மீதே குவிந்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில், தமிழ்த் தேசிய அரசியல் தரப்புக்கள், இவையெல்லாம் தெற்கின் பிரச்னை, எங்களுடைய மக்களுக்கு ஏற்கனவே இதெல்லாம் பழக்கப்பட்ட ஒன்றுதானென்று, கூறிவிட்டு அமைதியாக இருக்க முடியுமா?

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலத்திலிருந்து, இந்தியாவே பிரதானமாக உதவிவருகின்றது. ஓர் உடனடி அயல்நாடென்னும் நோக்கில்தான், இந்தியா அதிகம் இந்த விடயத்தில் ஈடுபாடு காண்பிக்கின்றது. இந்த நிலையில், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, ஏனைய நாடுகளின் உதவிகளும் தேவை. அதனை பெறும் முயற்சியிலேயே தற்போது, ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுவருகின்றார். இந்த விடயத்தில் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு அனைவருக்கும் உண்டு. முக்கியமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உண்டு. ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைக்கு வரும் வரையில் தாக்குப்பிடிப்பதற்கான வழிகளை ரணில் கண்டடைய வேண்டியிருக்கின்றது. அவற்றை கண்டடைந்தால்தான், மக்கள் வீதியில் இறங்குவதைத் தடுக்க முடியும். மக்கள் வீதிக்குவரும் சூழல் உருவானால், நாடு அமைதியிழக்கும். பின்னர், அரசியல் ஸ்திரமற்ற சூழலில், நாடுகளின் ஆதரவை பெறுவது கடினமாகிவிடும்.

இந்தப் பின்னணியில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் - குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தேவையற்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடு விவாதித்துக் கொண்டிருக்காமல், நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பில் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். இவ்வாறு பேசுவதால், தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகள் பலவீனப்படப் போவதில்லை.

ஏனெனில், இலங்கையின்மீது ஆர்வம் கொண்டுள்ள அனைத்து நாடுகளும், பிரதானமாக, தற்போது பொருளாதார நெருக்கடி தொடர்பில்தான் அவதானம் செலுத்துகின்றன. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரும், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவ வேண்டியதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தியிருக்கின்றார். இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு மனிதாபிமான பிரச்னையாக மாற்றமடையலாமென்று, அண்மையில், ஐக்கிய நாடுகள் சபையும் சுட்டிக்காட்டியிருந்தது. எனவே, இவ்வாறானதொரு சூழலில் நாங்கள் இந்த விடயங்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம் - என்றவாறு அரசியல் பேச முற்படுவதானது, அடிப்படையிலேயே தவறானதாகும். ஏனெனில், தமிழர்கள், நீதி கோரும் சர்வதேச சமூகம் முழுவதும், இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் மீதே கவனம் செலுத்துகின்றது. இந்த பின்புலத்தில்தான், அமெரிக்க தூதுவரும் சீனத் தூதுவரும் உரையாடியிருக்கின்றனர். இப்போதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விழித்துக் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் பேசுவதுடன் கடமை முடிந்துவிட்டதாக எண்ணிக் கொள்ளும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது தொடர்பிலேயே அனைவரும் சிந்திக்க வேண்டும். பொருளாதார விடயங்களில் அமைதியாக இருப்பதால், ஒரே

நேரத்தில் இரண்டு தீமைகளை எதிர்கொள்ள நேரிடும். ஒன்று, பொருளாதார நகர்வுகளில் தமிழ் தரப்பினருக்கு பங்கில்லாமல் போகும். இரண்டாவது, தமிழர்களுக்கு பொருளாதார முன்னேற்றத்தில் அக்கறையில்லையென்னும் புரிதல் சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்படும்.

# இலங்கையின் இறையாண்மை!

**அலசுவது இராஜதந்திரி**



இலங்கையின் இறையாண்மைக்கு சவால் விடும் வகையில் இந்தியாவை அனுமதிக் கக் கூடாது என்று முன்னாள் மின்சக்தி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளதை நோக்கும் போது கடந்த நான்கு தசாப்த காலத்துக்கும் மேலாக இலங்கை எத்தகைய இறையாண்மையை கொண்டிருந்ததென்பதே கேள்விக்கு உரியதாக இருக்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் அரசியல் ரீதியாகவும் தற்போது பொருளாதார ரீதியாகவும் இலங்கையின் இறையாண்மை கேள்விக்கு உரியதாகவே இருக்கின்றது.

பிரச்னையான கால கட்டங்களினூடாக பிரவேசிக்கும் போது இந்தியாவே உடனடியாக செயலில் இறங்கி இலங்கைக்கு வேண்டிய உதவியை வழங்கியுள்ளது.

ஒரு நாட்டினுடைய இறையாண்மை என்பது வெறுமனே அதன் சுதந்திரத்தையும், குடியரசையும் உறுதி செய்கின்ற ஆவணங்களாக இருந்தால் மட்டும் போதாது. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான உறுதிப்பாட்டையும் வெளிநாடுகளிடம் தங்கியிராத நிலையையும் கொண்டதாக இருக்கும் பட்சத்திலேயே ஒரு நாட்டினுடைய இறையாண்மை முழுமையானதாக இருக்கின்றது.

பிரிட்டிஷாரின் காலனித்துவ ஆட்சியன் கீழ் இருந்தபோது இலங்கை தனது இறையாண்மையை இழந்திருக்கலாம். ஆனால், இலங்கையின் பொருளாதாரம் மிக உன்னதமான நிலையில் காணப்பட்டிருந்தது.

பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்துக்கு முன்பதாகவே இலங்கையருக்கு பௌத்த மதம் மூலமாக ஓர் உயரிய நாகரிகத்தை அறிமுகப்படுத்தியதே இந்தியாவாகும்.

இந்தியாவின் கீர்த்திமிக்க அசோக சக்கரவர்த்தியின் புதல்வாரன அரகாத் மஹிந்தவும் அவரின் சகோதரியான சங்கமித்தையும் இலங்கைக்கு பௌத்த மதத்தை அறிமுகப்படுத்தியிருந்தனர். இந்தியாவில் புத்த பகவான் ஞானம் பெற்றிருந்த வெள்ளரசு மரத்தின் சிறய கன்றொன்றை அரகாத் மஹிந்தவும் அவரது சகோதரியான சங்கமித்தையும் இலங்கையில் கொண்டுவந்து நாட்டி பௌத்த மதத்தை பரவச்செய்த தினமே பொசன் முழுமதி தினமாக நேற்றைய தினம் பௌத்த மதத்தினரால் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

இதன்மூலம், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவு எவ்வளவு தூரம் புராதனமானது என்பதை அறிய முடியும்.

இதுதவிர, இலங்கையர்கள் பலரினதும் சமூக, கலாசார விடயங்களில்கூட இந்தியாவின் செல்வாக்கு பிரதிபலிப்பதை அவதானிக்க முடியும்.

இலங்கைக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை மூன்று பில்லியன் டொலர்களை உதவியாக இலங்கை வழங்கியுள்ளது. இது தவிர, உணவுப் பண்டங்களாகவும் எரிபொருளாகவும் இலங்கைக்கு இந்தியாவின் உதவி கிடைத்த வண்ணமே இருக்கின்றது. இந்திய மத்திய அரசு மட்டுமல்ல, தமிழ்நாடு மாநில அரசுகூட இலங்கைக்கு பெருமளவு உதவியை தற்போதைய காலகட்டத்தில் வழங்கியுள்ளது.

இந்தியாவும் சீனாவும் எல்லைப் பிரதேச சர்ச்சைகளைக் கொண்டுள்ளன. இருந்தபோதிலும் மனிதாபிமான அடிப்படையில் இலங்கைக்கு இந்தியா வழங்குகின்ற உதவியை சீனா பாராட்டியுள்ளது.

இந்நிலையில், இந்தியா இலங்கையின் இறையாண்மைக்கு சவாலாக இருக்கக்கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க கூறியிருப்பது அவரின் வெளி உலக அரசியல் பார்வை எவ்வளவு தூரம் விசாலமானது என்ற கேள்வியை எழுப்புவதாகவே இருக்கின்றது.


இலங்கையில் மின்சக்தி துறையை இந்தியாவின் பிரபல அதானி நிறுவனத்துக்கு வழங்குவது பற்றிய பேச்சு பலமாக வெளிவர ஆரம்பித்துள்ள தருணத்திலேயே முன்னாள் மின்சக்தி அமைச்சராகவுமிருந்த சம்பிக்க ரணவக்க இலங்கையின் இறையாண்மைக்கு இந்தியா சவால் விடக்கூடாது எனக்குறிப்பிட்டுள்ளார்.

அதானி நிறுவனத்துக்கு மன்னார் பிரதேசத்தில் பசுமை மின் உற்பத்திக்கென நிலத்தை வழங்குவது தொடர்பாகவே சம்பிக்க ரணவக்க இந்தியா இலங்கையின் இறையாண்மையில் தலையிடக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார். அதானி நிறுவனம் பசுமை மின்சக்தியை உருவாக்குவது தொடர்பாக பல சர்வதேச நிறுவனங்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்த முயற்சிகளில் இறங்கியுள்ளது.

எனவே, இலங்கைக்கு இந்தியாவின் அதானி நிறுவனத்தின் மூலமான உதவிகள் நேர்த்தியான முறையில் பெறப்படும் பட்சத்தில் பொருளாதார ரீதியாக சாதாகமான சூழ்நிலைகளையும் எதிர்பார்க்க முடியும்.

இத்தகைய பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க இந்தியா இலங்கையின் இறையாண்மையை சவால்விட அனுமதிக்கக்கூடாதென்று கூறியுள்ளமையை நோக்கும் போது இலங்கைக்கு பொருளாதார, அரசியல் உறுதிப்பாட்டுடன்கூடிய பூரணத்துவமான இறையாண்மை இருக்கின்றதா? என்ற கேள்வியே எழுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
மற்றவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம். அதனால் சங்கடம் ஏற்படும். குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் ஒரு இடைவெளி உண்டாகும். செயல்களில் இழுபறி இருக்கும்.

**இடபம்**
நீங்கள் விரும்பியதை இன்று அடைவீர்கள். உங்கள் முயற்சிகள் பலிதமாகும். சவாலான வேலைகளை சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். நன்மை அடையும் நாள்.

**மிதுனம்**
வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாகும். எதிரி உங்களிடம் சரணடைவார்கள். நேற்று இழுபறியாக இருந்த ஒரு விவகாரம் இன்று முடிவிற்கு வரும்.

**கடகம்**
பிள்ளைகளின் நலன் குறித்த யோசிப்பீர்கள். நிதி நிலை உங்களுக்கு சாதகமாகும். உங்களுடைய தொழிலில் செல்வாக்கு உயரும். திட்டமிட்டிருந்த வேலை மற்றவர் உதவியுடன் நிறைவேறும்.

**சிம்மம்**
திடீர் பயணம் உண்டாகும் என்றாலும் அதனால் நன்மை அடைவீர்கள். பழைய நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வேலையில் ஏற்பட்ட சங்கடத்தை சரி செய்வீர்கள்.

**கன்னி**
கடவுள் அருளால் வாழ்க்கைக்கு தேவையான தைரியமான ஒரு முடிவை எடுப்பீர்கள். அரசு வழியில் எதிர்பார்த்த லாபம் உண்டு. சுற்றி இருப்பவர்களில் நல்லவர், கெட்டவர் யார் என்று தெரிந்து கொள்வீர்கள்.

**துலாம்**
தொழிலில் இழுபறியாக இருந்து வந்த வேலை முடிவிற்கு வரும். உறவினர்களால் நன்மை உண்டு. உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவால் நன்மை உண்டாகும்

**விருட்சிகம்**
இன்று எளிதாக முடிய வேண்டிய வேலையை சற்று சிரமப்பட்டு முடிப்பீர்கள். ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உங்களுடைய மனம் குழப்பமடையும் எதிர்பார்த்த செயல் தாமதம் அடையும். அடுத்தவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**தனுசு**
நெருக்கமானவர்களிடம் மனஸ்தாபம் ஏற்படும். நிதானம் தேவை. எதிர்பார்த்த செயலில் தடை உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்**
விவேகத்துடன் செயல்பட்டு உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நேற்றைய கடனை இன்று அடைப்பீர்கள். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றி நினைத்ததை சாதிப்பீர்கள்.

**கும்பம்**
வியாபாரத்தில் புதிய அணுகுமுறைகளைக் கையாள்வீர்கள். முயற்சி லாபமாகும். நீங்கள் எதிர்பார்த்த பணம் இன்று உங்கள் கைக்கு வரும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
வராமல் போன பணம் இன்று உங்கள் கைக்கு வரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் தீரும். வியாபாரத்தில் ஏற்பட்ட மந்தநிலை மாறும். பரபரப்பான நாள். நடக்காது என்று நினைத்த செயல் ஒன்று இன்று நிறைவேறும். மன அழுத்தம் குறையும்

# மதுரை ஆதீன பீடாதிபதியை எம். பியாக்க பா. ஜ. க. திட்டம்?



மதுரை, ஜூன் 15

தி. மு. கவை கடுமையாக எதிர்த்துவரும் மதுரை ஆதீனத்தை பாராளுமன்ற உறுப்பி னராக நியமிக்க பா. ஜ. க. திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் மிகத் தொன்மையான சைவ சமயத் திரு மடங்களில் ஒன்று மதுரை ஆதீனம் மடம். சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு திரு ஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்ட மடம் இது. மதுரை ஆதினத்தின் 293ஆவது பீடாதிபதியாக ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச் சாரிய சுவாமிகள் செயல்பட்டு வருகிறார்.

இவர்பீடாதிபதியாக பொறுப்பேற்ற காலம் தொட்டு, தி. மு. க. அரசையும், இந்து சமய அற நிலையத் துறையையும் கடுமை யாக விமர்சித்து வருகிறார். இவர், தருமபுர ஆதீனத்தின் பட்டினப் பிரவேசத்துக்கு தடை விதிக்கப்பட்டதை கடு மையாக விமர்சித்திருந்தார்.

தி. மு. க. எதிர்ப்பு கருத்து களை முன்வைத்து வரும் மதுரை ஆதீனத்துக்கு பா. ஜ. க. பகிரங் கமாக ஆதரவு தெரிவித்து வரு கிறது. பிரதமர் மோடி சென் னைக்கு வந்தபோது, அவரை மதுரை ஆதீனம் சந்தித்துப் பேச பா. ஜ. க. நிர்வாகிகள் ஏற் பாடு செய்தனர்.

இந்நிலையில், மதுரை ஆதீனத்தை முழுமை யாக தங்களுக்கு ஆதரவாக பயன்படுத் தும் நோக்கத்தில் அவருக்கு நியமன எம். பி. அல்லது பா. ஜ. க. ஆளும் மாநிலங்களில் இருந்து மாநிலங் களவை எம். பியாக தெரிவு செய்ய பா.ஜ.க. முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள் ளது. இதற்கேற்ப சமீப காலமாக மதுரை ஆதீ னத்தை பா. ஜ. க. நிர்வாகி கள் மற்றும் இந்து அமைப்பினர் அடிக்கடி சந்தித்து பேசி வருகின் றனர்.

மதுரை ஆதினத்துக்கும் அரசியலுக்கும் எப் போதும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. முன்னாள் ஆதீனம் அருண கிரிநாதர் தி. மு. கவை யும் பின்னர் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவையும் பகிரங்கமாக ஆதரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# முற்றுகை போராட்டம் நடத்திய 300 காங்கிரஸ் கட்சியினர் கைது

சென்னை, ஜூன் 15

காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தியிடம் விசாரணை நடத்தப் பட்டதைக் கண்டித்து, மத்திய அரச அலுவலகமான சாஸ்திரி பவனை முற்றுகையிட்ட தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி உள்ளிட்ட 300 இற்கும் மேற்பட்டோர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

நஷனல் ஹெறால்ட் பத்திரிகையின் பங்குகளை வாங்கியது தொடர்பாக காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரிடம் அண்மையில் விசாரணை நடத்தப்பட்டது.

இது எதிர்க்கட்சித் தலைவர்களை முடக்க மேற்கொள்ளப் படும், ஆளும் மத்திய அரசின் சர்வாதிகாரப் போக்கு என்று கூறி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தலைமையிலான கட்சியினர் இந்த முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர்.

இதையடுத்து, காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் கே. எஸ். அழகிரி உட்பட 300இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு மண்டபம் ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

(ஐ)

# குடியரசு தலைவர் வேட்பாளராக கிறிஸ்தவரை நியமிக்க வேண்டும்

## எதிர்க்கட்சிகளை கோருகிறார் திருமாவளவன்

சென்னை, ஜூன் 15

“இந்திய சுதந்திரத்தின் பவள விழா கொண்டாடப்பட இருக்கும் இந்நேரத்தில் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்படுவது இந்திய ஜன நாயகத்தின் மாண்பை உலகுக்கு உணர்த்துவதாக அமையும்” என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள் ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் “எதிர்வரும் ஜூலை 18ஆம் திகதி நடைபெறவுள்ள குடியர சுத் தலைவர் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாள ராக கிறிஸ்தவர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம். இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில் இதுவரை கிறிஸ்தவ சமூகத்தைச் சார்ந்த எவரும் குடியரசுத் தலைவராக இருந்த தில்லை.

இந்திய மக்கள் தொகையில் மூன்றாவது பெரிய மக்கள்



தொகையைக் கொண்ட கிறிஸ் தவ சமூகத்துக்கு சட்டமன்றங் களிலும் பாராளுமன்ற அவை களிலும் போதுமான பிரதி நிதித்துவம் அளிக்கப்படுவ தில்லை . சட்டமன்றங்களிலும் போதுமான பிரதிநிதித்துவம் அவர்களுக்குக் கிடைப்ப தில்லை. அவர்கள் பெரும்பான் மையினராக இருக்கும் வட கிழக்கு மாநிலங்கள் மற்றும் அவர்களது மக்கள் தொகை குறிப்பிடத்தக்க அளவுக்கு இருக்கும் கோவா, கேரளா போன்ற மாநிலங்கள் தவிர மற்ற மாநிலங்களில் அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற் குக் கூட போதிய வாய்ப்பு கிடைப்பதில்லை.

கடந்த எட்டாண்டுகால பா. ஜ. க. ஆட்சியில் இஸ்லாமியர் கள் மட்டுமின்றிக் கிறித்தவர்க ளும் குறிவைத்துத் தாக்கப்படு கின்றனர். பல்வேறு மாநிலங்க ளில் மதமாற்றத் தடை சட்டம் கொண்டுவரப்பட்டு எவ்வித ஆதாரமும் இன்றி கிறிஸ்த வர்கள் பழிவாங்கப்படுகின்ற னர்.

இந்தியாவின் கல்வி, சுகாதா ரம், பொருளாதாரம் போன்ற வற்றின் வளர்ச்சிக்குக் கிறிஸ்தவ சமூகம் ஆற்றியிருக்கும் பங்க ளிப்பு மகத்தானது. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகையில் இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர் களின் எண்ணிக்கை 2.78 கோடி ஆகும். இவ்வளவு பெரிய எண் ணிக்கை கொண்ட ஒரு சமூகம் இப்படி புறக்கணிக்கப்படுவதும் தாக்குதலுக்குள்ளாவதும் இந் திய ஜனநாயகத்துக்குப் பெருமை சேர்ப்பதாகாது. இந்திய சுதந்தி ரத்தின் பவள விழா கொண் டாடப்பட இருக்கும் இந்நேரத் தில் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்படுவது இந்திய ஜனநாயகத்தின் மாண்பை உலகுக்கு உணர்த்துவதாக அமையும் - என்றுள்ளது.

(ஐ)




# நாட்டை மீட்பதற்கான பயணத்தில் இணையவேண்டும் கூட்டமைப்பு!

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 15

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நல்லவர்கள் உள்ளனர். நாட்டை மீட்பதற்கான பயணத்தில் அவர்களும் இணைய வேண்டும்” - என்று 43 ஆம் படையணியின் பொதுச்செயலாளரும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதை அரசு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகின்றது. ஜூலை முதல் வாரமளவில் ஆரம்பக் கட்ட இணக்கப்பாடு எட்டப்



படும் என எதிர்பார்க்கின்றோம். ஆனால், அதன்மூலம் அனைத்துப் பிரச்னைகளும் தீராது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நகர்வுகள் தோல்வி அடைந்தால், நாட்டை மீட்பதற்கான மாற்றுத் திட்டத்தை முன்வைக்க நாம் தயார்.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல கட்சிகளில் நல்லவர்கள் உள்ளனர். அவர்களும் நாட்டை மீட்பதற்கான பயணத்தில் இணைய வேண்டும். நபர்கள் முக்கியம் அல்ல. நாடுதான் முக்கியம்- என்றார். (அ)

# கந்த முருகேசனாரின் 57ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

புலோலியூர் தமிழ் அறிஞர்களில் ஒருவரான தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரின் 57ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை ஒட்டி காலை 9 மணியளவில் மந்திகைச் சந்தியில் உள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு சிலையை நிறுவிய புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினால் அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

நிகழ்வில் சங்கத்தலைவர் வி.ஜி.தங்கவேல், கந்தமுருகேசனார் நற்பணி நிதியத்தலைவர் எஸ் கனகலிங்கம் ஆகியோர் கந்தமுருகேசனாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தும் மலரஞ்சலியும் செய்தார்கள். நிகழ்வில் நற்பணி நிதிய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

நினைவு தினத்தை ஒட்டி கந்த முருகேசனாரின் உருவச் சிலை புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரல் அண்மையில் புனரைப்புச் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வத்தளையில் இளைஞர் சுட்டுப் படுகொலை!

கொழும்பு, ஜூன் 15

வத்தளையில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை - எலக்கந்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வருகை தந்த நபர் ஒருவர் குறித்த இளைஞர் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் ராகமை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கோண்டாவிலில் மருத்துவரின் வீடு உடைத்து நகைகள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

கோண்டாவிலில் மருத்துவரின் வீடுடைத்து 8 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிறு பிற்பகல் கோண்டாவில் இராசமாணிக்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள வீட்டில் இடம்பெற்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவரின் வீட்டிலேயே இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு வீட்டில் உள்ளவர்கள் நிகழ்வு ஒன்றுக்கு சென்று மாலை 5 மணிக்கு திரும்பிய போது வீடுடைத்து நகைகள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அம்பலாந்தோட்டைக் கடலிலில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மாயம்!

கொழும்பு, ஜூன். 15

அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் கடலுக்கு சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மருமகன் ஆகியோர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காணாமல் போன தாய்க்கு 55 வயது எனவும் அவரது மகனுக்கு 16 வயது எனவும் மருமகனுக்கு 22 வயது எனவும் தெரிவிக்கப்பட்டது.

வெலிபதன்வில பகுதியில் உள்ள விகாரை ஒன்றுக்கு சென்ற குழுவினர் அங்கிருந்து கடலுக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களை தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. (அ)

# குடும்பஸ்தர் கத்தியால் குத்திப் படுகொலை!

கொழும்பு, ஜூன் 15

குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் படல்கம - வெலிகும்புர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் படல்கம பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பழைய தகராறொன்றின் காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவரை மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

# மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெறும் கனிய மணல் அகழ்வு!

மன்னார், ஜூன் 15

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு குறித்து விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்-

மன்னார் மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் இல்மனைட் கனிய வள மண் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் இல்மனைட் மணல் அகழ்வுக்கு பாரிய எதிர்ப்புகள் இருந்தும் கூட அதற்கு எந்தத் தடையும் இன்றி கனிய வள மணல் அகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக மக்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே கலந்துரையாடல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும்,குறித்த கலந்துரையாடல் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொசன் தினத்தை முன்னிட்டு

# யாழ்.சிறையிலிருந்து 7 கைதிகள் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜூன் 15

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஏழு கைதிகள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறுகுற்றங்களை புரிந்தவர்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்த தவறியவர்களே இவ்வாறு சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

நாடு முழுவதும் 173 கைதிகளுக்கு இன்றைய தினம் பொது மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்திருந்த நிலையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஏழு கைதிகள் விடுவிக்கப்பட்டனர். (அ-03)

# இரண்டு பிள்ளைகளின் தாய் வீட்டிலிருந்து சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜூன் 15

வீட்டிலிருந்து குடும்பப் பெண் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தியத்தலாவ - கஹகொல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்தே குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் வானடியத்தலாவ - கஹகொல்ல பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் தனது கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்த நிலையில், வீட்டில் கணவர் மற்றும் பிள்ளைகள் இல்லாத சமயத்தில் உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சடலம் பிரேத பரிசோதனைக்காக தியத்தலாவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (அ)

# யாழ்.-தமிழகம் இடையே படகு, விமான சேவைகள்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 15

யாழ்ப்பாணத்துக்கும் பாண்டிச்சேரிக்கும் இடையில் பயணிகள் மற்றும் சரக்கு படகுகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கும், பலாலி - திருச்சி விமான நிலையங்களுக்கு இடையிலான விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்குமான சாதகமான முடிவுகள் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவையில் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், விரைவில் குறித்த போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதனூடாக மண்ணெண்ணெய், டீசல் போன்ற எரிபொருட்களையும் உரம், பால்மா, மருந்துப் பொருட்கள் உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களையும் தேவையான அளவு பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினார்.

இது தொடர்பான முயற்சிகளுக்கு பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கி வரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் துறைசார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (அ)

# 21ஆம் திருத்தம் ஜனாதிபதிக்கு சாதகமானதாகவே அமையும்!

## பிரதமர் ரணில் கூறுகிறார்



**கொழும்பு, ஜூன் 15**

**அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை கொண்டுவருவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

எனினும் அது ஜனாதிபதிக்கு சாதகமாக அமையும் எனவும், பாதகமாக அமையாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தை ஆய்வு செய்வதற்கு கால அவகாசம் தேவை என அமைச்சர்கள் முன்னர் தெரிவித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மே 21ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் இது குறித்து கலந்துரையாடியதாகவும் அவர் கூறியுள்ளார்.

2020 அல்லது 2021 இல் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்தால், தற்போது கடனை செலுத்த வேண்டிய தேவை இருக்காது என்றும் பிரதமர் இதன்போது மேலும் தெரிவித்தார். (அ)

# ஐ.தே.கவுடன் இணைய சில கட்சிகள் தீர்மானம்!

கொழும்பு, ஜூன்.15

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகள் உள்ளிட்ட மேலும் சில கட்சிகள் தம்முடன் இணைந்து கொள்வதற்குத் தீர்மானித்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை மக்கள் தேசிய கட்சி, தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி, முற்போக்கு மக்கள் சேவையாளர் கட்சி, ஸ்ரீரெலோ, ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம், ஐக்கிய இலங்கை முன்னணி, இலங்கை ஐக்கிய சமாதான கட்சி ஆகிய வற்றின் பிரதிநிதிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நடைபெற்றுள்ளது.

நாட்டுக்குப் பயனுள்ள அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க குறித்த கட்சிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது. (அ)

# கலஹாவில் காணாமல்போன சிறுமி யாழ். நகர பஸ் தரிப்பிடத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

கலஹா - ஹயிட் தோட்டத்தில் காணாமல்போன 14 வயது சிறுமி, 6 நாட்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்று கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இராசலிங்கம் பிரியதர்சினி என்ற 14 வயது சிறுமியே இவ்வாறு யாழ்ப்பாணம் பஸ் தரிப்பிடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுமி காணாமல் போனமை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தியை அவதானித்த வர்த்தகர் ஒருவர், சிறுமி பஸ் தரிப்பிடத்தில் நின்றிருப்பதைக் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து சிறுமியைப் பொறுப்பேற்ற யாழ். பொலிஸார், அவரை கலஹா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு, அவர் கண்டி வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், இன்று புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்படவுள்ளார் என்றும் கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

11ஆம் திகதி காலை தான் யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியைத் தேடிச் சென்றதாகவும், செல்லும் வழியில் தனது அலைபேசி செயலிழந்ததால் நண்பியுடன் தொடர்புகொள்ள முடியாமல் பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்ததாகவும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

வீட்டாருடன் ஏற்பட்ட மனக்கசப்பால் தனது ஆடைகளை எடுத்துக்கொண்டு, கடந்த 5ஆம் திகதி மாலை திகனையிலுள்ள அவரது நண்பி ஒருவரின் வீட்டுக்கு குறித்த சிறுமி சென்றுள்ளார்.

அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்த குறித்த சிறுமி, அந்த வீட்டிலுள்ளவர்களின் அறிவுறுத்தலுக்கமைய தனது வீட்டுக்குச் செல்வதற்காக கண்டி பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றுள்ளார்.

அப்போது அவரது கையில் 9 ஆயிரம் ரூபா பணம் இருந்ததாகவும், அந்தப் பணத்தில் 4 ஆயிரம் ரூபா செலவில் அலைபேசி ஒன்றைக் கொள்வனவு செய்து தனது வீட்டுக்குச் செல்ல மனமில்லாமல், யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பியின் சகோதரி ஒருவருக்கு அழைப்பை ஏற்படுத்தி, தனக்குத் தொழில் ஒன்றைப் பெற்றுத் தருமாறு தெரிவித்துள்ளார். எனினும், தொழில் செய்ய தற்கு வயது போதாது என்றும், அதுவரை விடுதியொன்றில் தங்கியிருக்குமாறும் அந்தச் சகோதரி தெரிவித்ததையடுத்து, சிறுமி யாழ்ப்பாணம் செல்வதற்காக கண்டியிலிருந்து புறப்பட்டுள்ளார்.

கண்டியில் இரவு 7 மணிக்கு வவுனியா பஸ்ஸில் ஏறி இரவு 11 மணியளவில் வவுனியாவை அவர் சென்றடைந்துள்ளார். பின்னர் இரவு முழுவதும் வவுனியா பஸ் தரிப்பிடத்தில் தங்கியிருந்த குறித்த சிறுமி அதிகாலை 4.20 மணியளவில் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸில் ஏறி, யாழில் உள்ள நண்பியின் சகோதரியுடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றபோது சிறுமியின் அலைபேசி செயலிழந்துள்ளது.

இதன்போது பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள கடைக்குச் சென்று தனது அலை பேசியின் பட்டரியை சார்ஜ் செய்து தரும்படி கேட்டபோதே, அந்த வர்த்தகர் சிறுமியை அடையாளம் கண்டு பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.

பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய, குறித்த சிறுமியின் சகோதரி மற்றும் உறவினர்கள் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, சிறுமியை அழைத்து வந்து, கலஹா பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுமியின் சகோதரி மற்றும் தாயிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதுடன் கலஹா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அதானி குழுமம் கவலை!

கொழும்பு, ஜூன் 15

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழுத்தத்தின் கீழ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதானி நிறுவனத்திற்கு இலங்கையின் இரு மின் னுற்பத்தி திட்டங்களை வழங்கியதாக இலங்கை அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்து ஏமாற்றமளிப்பதாக அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் முதலீடு செய்வதன் நோக்கம் மதிப்புமிக்க அண்டை நாடுகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதாகும் என அதானி குழுமத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில், இலங்கையில் இரண்டு மின்னுற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவின் அதானி குழுமத்துக்கு வழங்குவதற்கு தமக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்ததாக மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சீ. பெர்டினண்டோ, கோப் எனப்படும் பொதுமுயற்சிகள் பற்றிய குழுவில் தெரிவித்திருந்தார்.

இந்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில்,எம்.எம்.சீ.பெர்டினண்டோ மன்னிப்பு கோரியிருந்ததுடன் தமது பதவி விலகல் கடிதத்தையும் எரிசக்தி அமைச்சரிடம் சமர்ப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹர்ஷவின் குற்றச்சாட்டை மறுத்த மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி!

கொழும்பு, ஜூன் 15

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் குற்றச்சாட்டை மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் மறுத்துள்ளார்.

பல நாடுகள் இலங்கைக்கு உதவ தயாராக இருப்பதாகவும் அதற்கான உதவிகள் கிடைக்கும் என்று தான் நம்புவதாக அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தானும் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியும் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாகவும் இலங்கைக்கு உரிய திட்டங்கள் இல்லாததால் உலக நாடுகள் உதவிக்கு வர தயங்குவதாக மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)









# வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது

முல்லைத்தீவு, ஜூன் 15

உப்பு நீரில் விளக்கெரியும் அற்புதம் நிறைந்த வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவின் வற்றாப்பளை பதியில் அமர்ந்து மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி விவசாக பொங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை தொடங்கி நேற்று செவ்வாய்கிழமை அதிகாலை வரையில் பாரம்பரிய முறைப்படி சிறப்புற நடைபெற்றது.

அம்மன் பொங்கல் நிகழ்விற்காக கடந்த 06 ஆம் திகதி முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து சென்று முல்லைத்தீவு தீர்த்தக் கரை கடல் நீரீல் தீர்த்தம் எடுத்து கடந்த ஏழு நாட்களாக முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் அணையா விளக்காக எரிந்து காட்டு விநாயகர் ஆலயப் பொங்கல் நிகழ்வை தொடர்ந்து நேற்று முன் தினம் திங்கட் கிழமை அதிகாலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு பொங்கல் நிழக்வுகள் நடைபெற்றன.

அதிகாலை 12.00 மணிக்கு பொங்கல் நிழக்வுக்கான ஏற்பாடுகளாக மடைப்பண்டம் எடுத்துவரப்பட்டு பொங்கல் பானை தயார் செய்யப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு பொங்கல் பொங்கப்பட்டது.

கண்ணகி அம்மனுக்கு படையல் வைக்கப்பட்டு சிறப்பு பூசை வழிபாடுகள் அதிகாலைவேளையில் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து குளிர்வித்தல், தடை வெட்டுதல் எனப்படும் சடக்குகளுடன் பொங்கல் நிறைவு பெற்றது. (அ)

# 21 ஆவது திருத்தம் சாத்தியம் இல்லை

## சட்டத்தரணி ஜகத் லியன ஆராச்சி

கொழும்பு, ஜூன் 15

**பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் அரசமைப்பாக இருக்குமாயின் இன்று நாடு சந்தித்து வரும் எந்தப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இன்றைய பொருளாதாரப் பிரச்னைகளுக்கு எமது அரசமைப்பே காரணம். எனினும், 21ஆம் திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும் சாத்தியம் இல்லை என அரசமைப்பு தொடர்பான விமர்சகர் சட்டத்தரணி ஜகத் லியன ஆராச்சி தெரிவித்தார்.**

தேசிய சமாதான பேரவையின் ஆதரவில் கண்டியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றிலே அவர் இதனைக் கூறினார்.

21ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பாக கண்டி - டெவோன் ஹோட்டலில் இடம்பெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசமைப்பில் இதுவரை 20 திருத்தங்கள் வரை நிறைவேற்றப்பட்டுள்ளன. எனினும், இதில் 13,16,17,19 ஆம் திருத்தங்கள் தவிர ஏனையவை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவது தொடர்பான திருத்தங்களாகவே உள்ளன.

எனவே, இலங்கை அரசமைப்பின் முக்கிய பண்பான ஜனநாயகப் பண்பைவிட சர்வாதிகாரப் பண்புகளுக்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன. இது ஜனநாயக மயமாக்கப்பட்டது என்பதைவிட தனிநபர் அதிகாரமயம் கொண்டது என்றால் மிகையாகாது.

இதன் விசித்திரங்கள் பல உள்ளன. உதாரணமாக, மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட குழுவை ஒதுக்கி விட்டு ஒரு தனி ஆசனத்தை மட்டும் கொண்டவர் பிரதமராக நியமிக்கப்பட்டமை மற்றும் பாராளுமன்றத்தில் சக்திமிக்க ஒருவர் பதவியை விட்டு ஒதுங்கியமை, ஒரு சகோதரர் ஜனாதிபதி, மற்றொரு சகோதரர் பிரதமர், இன்னும் இரண்டு சகோதரர்கள் அமைச்சர்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள் பலர் அமைச்சர்கள், அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னும் பலர் அரச இயந்திரத்தை இயக்குபவர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை எனப் பலவிடயங்கள் உண்டு. சுருக்கமாகக் கூறின் பண்டைய காலத்து இராஜாக்களை உருவாக்கியுள்ளது போலுள்ளது எனலாம்.

இலங்கை அரசமைப்பு பல முறை திருத்தப்பட்டுள்ளது. நாம் குடியேற்ற நாடாக இருந்த காலத்தில்கூட டொனமூர் , சோல்பரி என இரு அரசியல் அமைப்புக்கள் இருந்தன. இவை பொதுமக்களது கருத்துக்களால் உருவாக்கப்பட்டவை. சுதந்திரத்தின் பின் 1972, 1978 களில் புதிய அரசமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. இதில் எதிலுமே பொதுமக்களது கருத்துக்கள் பெறப்படவில்லை.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்தன கொண்டு வந்த அரசமைப்புத்தான் இன்னும் அமுலில் உள்ளது. இது பொதுமக்கள் கருத்துக்களால் உருவாக்கப்பட்டதல்ல. அதன்பின் கொண்டுவரப்பட்ட திருத்தங்களின் போதும் பொதுமக்களது கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை.

ஆனால், 2015இல் முன்வைக்கப்பட திருத்தங்களில் பொதுமக்களது கருத்துக்கள் பெறப்பட் டன. எனவே, இப்படியாக ஒட்டுமொத்தமாக நோக்கின் இலங்கை அரசமைப்பு மக்கள் மயமாக்கப்பட்டதல்ல என்பதும் அது நிறைவேற்று அதிகார பலத்தை மையமாகக் கொண்டது என்பதுமே தெளிவு.

சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு தலைவர்களை நியமிப்பது போன்ற பல பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட அரசமைப்பு சபையானது 17ஆம் திருத்தத்தில் கொண்டு வரப்பட்டது. ஆனால், அது 18ஆல் நீக்கப்பட்டது. பின்னர் 19இல் கொண்டுவரப்பட்டு 20ஆல் நீக்கப்பட்டது. தற்போது அது 21இல் கொண்டு வரப்படலாம் என்று எதிர்பார்க்க முடியாதுள்ளது.

தற்போது பேசப்பட்டு வரும் அரசமைப்பு சபை அடங்கலாக 21ஆம் திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும் சாத்தியங்கள் இல்லை என்றே கூற முடியும்-என்றார். (அ)

# வவுனியாவில் பெண்ணொருவரை கடத்தி கப்பம் கேட்ட நால்வர் கைது!

வவுனியா, ஜூன் 15

வவுனியாவில் பெண்ணொருவரை கடத்தி கப்பம் கோரிய நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வாரிகுட்டியூரில் இருந்து 55 வயதுடைய பெண்ணை கடத்தி 500,000 ரூபா கப்பம் கோரிய நான்கு பேர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணொருவரை கடத்திச் சென்று பெண்ணின் மகளைத் தொலைபேசியில் அழைத்து 500,000 ரூபா பணம் கேட்ட குழுவொன்று தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் 26 தொடக்கம் 49 வயதுக்குட்பட்ட வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கடத்தப்பட்ட பெண்ணை மீட்க குறித்த தொகையை வழங்கா விட்டால் கொலை செய்து விடுவதாக சந்தேகநபர்கள் அச்சுறுத்தியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களை வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதுடன், குறித்த பெண்ணிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சமூக பாதுகாப்பு நிதியம் வெகுவிரைவில் அறிமுகம்

கொழும்பு, ஜூன்.15

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆண்டொன்றுக்கான மொத்த விற்பனைப் புரள்வு 120 மில்லியன்களை அதிகரிக்கும் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு 2.5 வீதத்தின் கீழ் புதிய வரியாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரியை அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. (அ)

# முகமது நபியின் படம் வரைய இஸ்லாம் மதத்தில் தடை ஏன்?

ஜான் மெக்மேன்ஸ்

முகமது நபி பற்றிய விவாதத்தின் போது நீங்கள் ஒரு விஷயத்தை கவனித்திருப்பீர்கள். முகமது நபியின் படம் எங்கும் காட்டப்படவில்லை. இதற்குக் காரணம், இஸ்லாத்தில் அல்லாவையோ அல்லது வேறு எந்த நபியையோ ஓவியம், படம் அல்லது வேறு வழிகளில் காட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

முகமது நபியை படம் வரைவது அல்லது சிலை செய்வது அவரை அவமதிப்பதாகக் கருதப்படுகிறது. இது சிலை வழிபாட்டை ஊக்குவிப்பதாக நம்பப்படுகிறது. இந்த விதியை யாராவது மீறினால், அது பெரும் சர்ச்சையை ஏற்படுத்துகிறது. பிரெஞ்சு வார இதழான சார்லி ஹெப்தோ, முகமது நபியின் கார்ட்டூன்களை



வெளியிட்ட சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கும்.

ஆனால் இஸ்லாத்தில் ஏன் இத்தகைய விதிகள் உள்ளன? நபிகளை படம் மூலமாகவோ அல்லது வேறு எந்த வழி மூலமாகவோ காட்ட தடை ஏன்? நபிகளின் படம் எப்போதாவது இருந்திருக்கிறதா? இது தொடர்பாக முஸ்லிம்களின் மத நூலான குர்ஆன் என்ன சொல்கிறது? இந்தக் கட்டுப்பாடு இஸ்லாமிய கலையை எந்த அளவிற்கு பாதித்துள்ளது?

இதுபோன்ற பல கேள்விகள் உள்ளன, அவற்றின் பதில்களைத்தேட இந்தக் கட்டுரையில் முயற்சி செய்யப்பட்டுள்ளது.

**குர்ஆனில் இதைப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளது?**

இஸ்லாத்தின் புனித நூலான குர்ஆனில் அல்லாஹ்வின் படம் அல்லது முகமது நபியின் படம் தொடர்பாக குறிப்பிட்ட அல்லது வெளிப்படையான தடை எதுவும் இல்லை. செதுக்கப்பட்ட சிலை அல்லது ஓவியம் ஆகிய இரண்டுமே இதில் அடங்கும்

ஆனால் குர்ஆனில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் இஸ்லாத்தில் படம் வரைவதற்கு தடை உள்ளது என்று இஸ்லாத்தின் வல்லுநர்கள் கூறுகின்றனர். குர்ஆனில் மொத்தம் 114 அத்தியாயங்கள் உள்ளன, அவை சூராக்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாயம் அல்லது சூராவிற்குள்ளும் ஆயத் எனப்படும் சிறிய பகுதிகள் உள்ளன.

**குர்ஆனில் மொத்தம் 6236 ஆயத்கள் உள்ளன**

குர்ஆனின் 42வது சூராவின் 42வது ஆயத்தில், "அல்லாஹ் பூமியையும் வானத்தையும் படைத்தவன். அவனுடைய படம் என்று எதுவும் இல்லை" என்று கூறப்பட்டுள்ளது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

குர்ஆனில் எழுதப்பட்ட இந்த விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு, இஸ்லாமிய அறிஞர்கள் மனிதக் கைகளால் செய்யப்பட்ட ஒரு படத்தில் அல்லாவை சிறைப்பிடிக்க முடியாது என்று முடிவு கூறுகிறார்கள். அவ்வாறு யாரேனும் செய்ய முயன்றால் அது அல்லாஹ்வை அவமதித்ததாகவே கருதப்படும். இதே நம்பிக்கை முகமது நபிக்கும் பொருந்தும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

குர்ஆனின் அத்தியாயம் அல்லது சூரா எண் 21 இன் ஆயத் 52 முதல் 54 வரை, "(ஆபிரகாம்) தனது தந்தை மற்றும் மக்களிடம், "நீங்கள் எந்தப் படங்களை வணங்குகிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள், "எங்கள் முன்னோர்கள் அவரை வழிபடுவதைப் பார்த்திருக்கிறோம்." என்று சொன்னார்கள். அதற்கு ஆபிரகாம், "நிச்சயமாக நீங்கள் பார்த்திருப்பீர்கள். உங்கள் தந்தையும் இதை பார்த்திருப்பார். ஆனால் அது



கண்டிப்பாக தவறு," என்று சொன்னதாக எழுதப்பட்டுள்ளது.

இந்த ஆயத்தை மேற்கோள் காட்டி இஸ்லாத்தின் அறிஞர்கள் சிலை வழிபாட்டை படங்கள் ஊக்குவிக்கக் கூடும் என்று நம்புகிறார்கள். அதாவது ஒரு படத்தை உருவாக்குவதன் மூலம், தெய்வீகச் சின்னத்திற்குப் பதிலாக, அதன் உருவம் வழிபாட்டுப் பொருளாக மாறக்கூடும் என்று இஸ்லாமிய அறிஞர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

குர்ஆனில் முகமது நபியின் படங்கள், சிலையை இதைப் பற்றி குறிப்பாக எதுவும் கூறப்படவில்லை. ஆனால் ஹதீஸில் (ஹஸ்ரத் முகமது சொன்னது அல்லது செய்தது ஹதீஸ் என்று அழைக்கப்படு கிறது) படங்கள் உருவாக்குவதை தவிர்க்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**ஹதீஸில் கூறப்பட்டுள்ளது என்ன?**

முகமது நபி, தனது வாழ்க்கையில் சொன்னதும், செய்ததும் ஹதீஸ் என்று அழைக்கப்படுகிறது. இது முகமது நபி காலமான பிறகு எழுதப்பட்டது.

அல்லாஹ், முகமது, கிறிஸ்தவ மற்றும் யூத பாரம்பரியத்தின் அனைத்து முக்கிய இறைத் தூதர்களின் படங்களை வரைவது ஹதீஸில் தடைசெய்யப்பட்டுள்ளது. உயிரினங்கள் குறிப்பாக மனிதர்களின் படங்களை வரைவதையும் இஸ்லாம் தடை செய்கிறது.

இஸ்லாமிய கலை பெரும்பாலும் சிலைகள் இல்லாத மற்றும் அலங்கார விளக்கப்படங்களை நோக்கி சாய்வதற்கு இதுவே காரணம். உலகம் முழுவதும் கட்டப்பட்ட மசூதிகளின் சுவர்களிலும் குர்ஆனின் பக்கங்களிலும், வடிவியல் (geometry) வடிவங்களைக் காண்கிறோம்.

ஷியா முஸ்லிம்களின் பாரம்பரியத்தில் இந்தக் கட்டுப்பாடுகள் அவ்வளவு கடுமையாக இல்லை. பாரசீகத்தில் (நவீன இரான்) வரையப்பட்ட ஏழாம்



நூற்றாண்டின் முகமது நபியின் படங்களை நீங்கள் பார்க்கமுடியும்.

எடின்பரோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மோனா சித்திக்கி, முஸ்லிம் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட முகமது நபியின் சில படங்களைக் குறிப்பிடுகிறார். இந்த படங்கள் மங்கோலிய மற்றும் ஒட்டோமான் பேரரசு காலத்தில் வரையப்பட்டவை. இந்த படங்களில், முகமது நபியின் முகம் காட்டப்படவில்லை. ஆனால் அது அவரை சித்தரிக்கிறது என்பது தெளிவாக உள்ளது. இந்த படங்கள் முகமது நபி மீது கொண்ட மரியாதையால் உருவாக்கப்பட்டவை என அவர் கூறுகிறார்.

**எப்போது முதல் முகமது நபியின் படங்கள் முற்றிலுமாக தடை செய்யப்பட்டன?**

முகமது நபியின் பல படங்கள் 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. மேலும் அந்த நேரத்தில் அந்தப் படங்களை சிலைவழிபாட்டை ஊக்குவிக்காதபடி தனிப்பட்ட முறையில் பார்க்க முடியும் என்று மிச்சிகன் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கலைப் பேராசிரியரான கிறிஸ்டின் க்ரூபர் தெரிவிக்கிறார்.

18 ஆம் நூற்றாண்டில் அச்சு ஊடகங்கள் பெரிய அளவில் பரவியதால் இது சவாலுக்கு உள்ளாக ஆரம்பித்ததாக க்ரூபர் கூறுகிறார். இதற்கிடையில், ஐரோப்பிய சக்திகள் மற்றும் கருத்துக்கள், பல முஸ்லிம் நாடுகளில் ஆதிக்கம் செலுத்தின. இதுவும் இந்த விஷயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

தங்கள் மதம், கிறிஸ்தவத்திலிருந்து எவ்வளவு வித்தியாசமானது என்பதை காலனித்துவ சித்தாந்தத்திற்கு இஸ்லாமிய உலகம் இதன் மூலமாகக்காட்டியது என்று க்ரூபர் குறிப்பிட்டார்.

கிறிஸ்தவ மதத்தில் சிலை செய்வது, ஓவியம் வரைவது அல்லது படம் வரைவது தடை செய்யப்படவில்லை.

இதற்குப் பிறகு முகமது நபியின் படங்கள் மறையத்



தொடங்கி, அவருடைய படம் அல்லது உருவத்தை உருவாக்குவதற்கு எதிராக புதிய விவாதம் வெடித்தது. ஆனால் முகமது நபி உள்ளிட்ட இறைத் தூதர்களின் உருவங்களை வரைவதை பழங்கால அறிஞர்கள் எப்போதும் கண்டித்துள்ளனர் என்று பெரும்பாலான முஸ்லிம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இடைக்காலத்தில் உருவான முகமது நபிகளின் படங்களை அவற்றின் சூழலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று பிரிட்டனின் மிகப்பெரிய மசூதிகளில் ஒன்றான லீட்ஸில் உள்ள மெக்கா மசூதியின் இமாம் காரி ஆசிம் கூறுகிறார்.

"இந்த படங்களில் பெரும்பாலானவை ஒரு குறிப்பிட்ட இரவில் ஒரு குறிப்பிட்ட பயணத்தை சுட்டிக்காட்டுகின்றன. இதில் ஒரு ஆடு அல்லது குதிரை சித்தரிக்கப்பட்டுள்ளது. முகமது நபி ஒரு குதிரை அல்லது அது போன்ற ஏதோ ஒன்றின் மீது அமர்ந்திருக்கிறார்," என்று அவர் குறிப்பிட்டார்.

(முகமது நபி, பூமியிலிருந்து சொர்க்கத்திற்கு பயணம் செய்தார் என்றும் அவர் ஒரு குறிப்பிட்ட இரவில் பயணம் செய்தார் என்றும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.)

ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இவை முகமது நபியின் சாதாரண உருவப்படங்கள் அல்ல. பல படங்களின் விஷயம் தெளிவாக இல்லை என்றும் ஆசிம் கூறுகிறார்.

**இஸ்லாமிய கலை உருவானது எப்படி?**

முன்பு கூறியது போல், இஸ்லாத்தின் ஷியா மற்றும் சன்னி பிரிவினர் முகமது நபியின் படம் அல்லது உருவம் தயாரிப்பதில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஆனால், இஸ்லாமிய மதத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் நிபுணர்கள் மத்தியில் முகமது நபியின் படத்தை எந்த வடிவத்திலும் உருவாக்கக் கூடாது என்பதில் பொதுவான கருத்து உள்ளது.

இருப்பினும், உருவப் படங்களை உருவாக்குவது இஸ்லாத்தில் கண்டிப்பான முறையில் தடை செய்யப்படவில்லை. ஆனால் இந்த உருவப்படங்களை மதச் சூழலில் பார்க்கக் கூடாது. பல முஸ்லிம் மன்னர்கள் மற்றும் ராணிகளின் படங்கள் நமக்கு கிடைப்பதற்கு இதுவே காரணம். ஆனால் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லாஹ், நபி போன்றவர்களின் படங்கள் அப்படிக் கிடைப்பது இல்லை.

இஸ்லாமிய நாடுகளில் ஒரு புதிய கலை வடிவத்தின் எழுச்சிக்கு இது வழிவகுத்தது. இந்து கோவில்களில் தெய்வங்களின் உருவங்களையும், ஐரோப்பிய தேவாலயங்களில் இயேசு, மேரி போன்றோர் உருவங்களையும்



நாம் பார்க்கிறோம். அதே நேரம் மசூதிகள் வடிவியல் உருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவை எழுத்துக்கள் மற்றும் ஜன்னல் போன்ற அமைப்புகளைக் கொண்டுள்ளன.

நபிகள் நாயகத்தின் உருவத்தை வரைவதற்கு தடை உள்ளதால், சிலர் அவரை பிரதிநிதித்துவப்படுத்த புதிய வழிகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். இந்த வரிசையில், ஹிலியா போன்ற புலப்படும் வடிவங்கள் ஒட்டோமான் பேரரசில் தோன்றின. இது ஒரு கையெழுத்து அச்சு. இவை ஆயத்துகளின் கையெழுத்துப் பிரதிகள். இதில் நபிகள் நாயகம் பற்றி எழுதப்பட்டுள்ளது.

(பிபிசி)

# இலங்கையில் அதானி மின் திட்டம்: மோடி பற்றிய சர்ச்சையை விளக்க வலுக்கும் கோரிக்கைகள்

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையின் வட மாகாணத்திலுள்ள மன்னார் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் அமைக்கப்படவுள்ள நிலையில், அந்த திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்க எட்டப்பட்ட தீர்மானம், இன்று இரு நாடுகளிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை அதானி நிறுவனத்திற்கு வழங்குமாறு, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழுத்தங்களை கொடுத்ததாக, இலங்கை மின்சார சபையின் தலைவராக இருந்த எம்.எம்.சீ.பெர்டினன்டோ தெரிவித்திருந்தார்.

பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு (கோப் குழு) முன்னிலையில் கடந்த 10ஆம் திகதி இந்த கருத்தை அவர் கூறினார். எனினும், அடுத்த 24 மணித்தியாலத்திற்குள் இந்த கருத்தை அவர் திரும்பப் பெற்றார். இதேவேளை, பெர்டினன்டோவின் கருத்தை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக நிராகரித்து, தமது ட்விட்டர் பக்கத்தில் மறுப்பு வெளியிட்டார்.

இந்த சர்ச்சை வலுப்பெற்ற நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைவர் பதவியில் இருந்து எம்.எம்.சீ. பெர்டினன்டோ விலகியதாக, இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தமது ட்விட்டர் பக்கத்தில் ஜூன் 13ஆம் திகதி கூறியுள்ளார். அவரது ராஜினாமா கடிதத்தின் நகலை இலங்கை நாளிதழ் ஒன்று வெளியிட்டிருக்கிறது. அதில், தனிப்பட்ட காரணங்களுக்காக தாம் பதவி விலகுவதாக பெர்டினன்டோ குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அதானி நிறுவனமும் இலங்கையும்**


மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் 500 மெகாவாட் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கான காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க அதானி நிறுவனம், இலங்கையுடன் உடன்படிக்கையொன்றை கையெழுத்திட்டுள்ளது.


அத்துடன், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்யும் வகையில், இலங்கை, அதானி நிறுவனத்துடன் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டிருந்தது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம், 51 வீதமான பங்கு அதானி நிறுவனத்திற்கும், 34 வீதமான பங்கு, இலங்கை நிறுவனமான ஜோன் கீல்ஸ் நிறுவனத்திற்கும், 15 வீதமான பங்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் உரித்தாகின்றது.

இந்த திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் மன்னார் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள திட்டத்தை அதானி குழுமம் பெற்றுக்கொள்வதற்காக இந்திய பிரதமர், இலங்கைக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளதாகவே, மின்சார சபைத் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.







**அரசியல் களத்தில் சர்ச்சை**

பிரதமர் நரேந்திர மோடியின் குளறுபடிகள் பாக் நீரிணையையும் தாண்டி, தற்போது இலங்கையை நோக்கி பயணித்துக்கொண்டிருப்பதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கு அழுத்தம் பிரயோகித்ததாக வெளியான தகவல் குறித்து, தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபையின் தலைவராக செயற்பட்ட எம்.எம்.சீ.பெர்டினன்டோவிற்கு எதிராக சிறப்புரிமை யோசனையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கின்றார்.

மின்சார சபையின் தலைவர் கோப் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்திய தகவலை, பின்னர் வாபஸ் பெற்றுக்கொண்டமையானது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரது சிறப்புரிமைகளையும் மீறியதாக அமையும் என அவர் கூறுகின்றார்.

“அவருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளது. அது தான் இடம்பெற்றது. நாடாளுமன்ற கோப் குழு முன்னிலையில் பொய் சொல்வதற்கு உங்களுக்கு உள்ள உரிமை என்ன என்று பெர்டினன்டோவிடம் நான் கேட்க விரும்புகின்றேன். பெர்டினன்டோவிற்கு எதிராக சிறப்புரிமையை மீறியமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற விதத்தில் யோசனையொன்றை நான் கொண்டு வருவேன். இந்த கருத்தை வாபஸ் பெற்றமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை” என சஜித் பிரேமதாஸ தெரிவிக்கின்றார்.

**சட்டத்தரணிகளின் பார்வை**

பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு (கோப் குழு) முன்னிலையில் வெளியிட்ட கருத்தை, மீளப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்க முடியாது என இலங்கையின் பிரபல சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவா தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகள் குறித்து ஆராய்வதற்கு மாத்திரமே கோப் குழுவிற்கு அங்கீகாரம் உள்ளதாக கூறிய அவர், அந்த குழுவிற்கு சட்ட அங்கீகாரம் கிடையாது எனவும் குறிப்பிட்டார்.

இனிவரும் காலத்திலாவது கோப் குழுவிற்கு சட்ட அங்கீகாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்துகின்றார்.

“கோப் குழுவிற்கு சட்ட அதிகாரம் கிடையாது. பொது முயற்சியாண்மைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு, நாடாளுமன்றத்திற்குள் அரச நிறுவனங்களை அழைக்கின்றது. அந்த நிறுவனங்களில் இடம்பெறும் மோசடிகளை வெளிக்கொணர்கின்றது. அதன் பின்னர் அடுத்த கட்டம் எதுவும் கிடையாது. வெட்கப்பட வேண்டியது மாத்திரமே இறுதியில் ஏற்படும். அரச நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும். அரச நிறுவனங்கள் அதனை செய்ய தவறும் பட்சத்தில், கோப் குழுவினால் ஒன்றும் செய்ய முடியாது.

கோப் குழு முன்னிலையில் இவர் பொய் கூறினாலும், கோப் குழுவினால் ஒன்றும் செய்ய முடியாது. கோப் குழுவிற்கு உடனடியாக சட்ட ரீதியிலான அதிகாரத்தை வழங்க வேண்டும். ஜனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. மோடிக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. ராகுல் காந்தி தற்போது பிரச்னையை எழுப்புகின்றார். இந்தியாவிற்குள் பிரச்னை எழுந்துள்ளது. இந்த நிலையில், அவர் ராஜினாமா செய்தார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை யார் எடுப்பது? சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில், அவர் பதவி விலகி விட்டார்” என சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவா குறிப்பிடுகின் றார்.

சிறப்புரிமை யோசனையொன்றை கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் எம்.எம்.சீ. பெர்டினன்டோ அழைக்கப்பட்டு, அவரிடம் விசாரணைகள் நடத்த முடியும் என்ற போதிலும், அவருக்கு தண்டனை வழங்க முடியாது என அவர் மேலும் கூறுகின்றார்.

இதனால், கோப் குழுவிற்கு சட்ட அதிகாரம் வழங்கப்பட வேண்டிய கட்டாயம் தற்போது எழுந்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.


எனினும், நாடாளுமன்றத்திற்கு அவர் அழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்படும் பட்சத்தில், நாட்டு மக்களுக்கு உண்மையையாவது தெரிந்துக்கொள்ள முடியும் என இலங்கையின் பிரபல சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவா தெரிவித்தார். (பிபிசி)



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

....................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.......................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

......................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 1l 100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**15.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**15.06.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அதிக விலையில் அரிசி அம்பாறையில் விற்பனை

அம்பாறை, ஜூன். 15

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில், அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு அரிசியினை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை யடுத்து, மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாதவகையில் அத்தியவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்டுப்பாட்டு விலை நிர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

*2283/43*ஆம் இலக்க *10.06.2022* அதி விசேட வர்த்தமானியில் உள்நாட்டு வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி ஒரு கிலோ கிராம் *210* ரூபாய் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, அரிசியினை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து சில வர்த்தகர்கள் கூடுதலான விலைக்கு அரிசியினை விற்பனை செய்வதாக பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பான தகவல்களை *1977* அல்லது மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபையின் *0632222355* எனும் தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்க முடியுமென அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்பின் போது கண்டுபிடிக்கப்படும் வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார். (அ)



# கண்ணகி அம்மனின் திருக்குளிர்த்தி உற்சவம்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு மாவட்டத்தில், பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான வந்தாறுமூலை ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தின் திருக்குளிர்த்தி திருச்சடங்கு உற்சவம் நேற்று மாலை பக்தர்களின் ஆரோகரா கோசத்துடனும், சிலம்பு ஒலியுடனும் திருக்குளிர்த்தி ஆடல் வைபவத்துடன் நிறைவுபெற்றது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி அன்று திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி, வந்தாறு மூலை 7 குடிமக்களின் பங்களிப்புடன் தொடர்ந்து 5 நாட்கள் திருச்சடங்கு நடைபெற்று, நேற்று முன் தினம் மாலை வைகாசி திங்கட்கிழமையன்று திருக்குளிர்த்தி வைபவத்துடன் திருச்சடங்கு நிறைவு பெற்றது.

அதனைத்தொடர்ந்து, நேற்றுமுன்தினம் சாடிப்பானை எடுத்து பக்கப்பானைகள் வைத்தலுடன், பொங்கல் வைபவம் இடம்பெற்றது.

இவ்வருடம் வழக்கத்திற்கு மாறாக அடியார்கள் பசும்பாலில் பொங்கல் தயாரித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினார்கள்.

திருச்சடங்கானது ஆலயத் தலைவர் சொ.தங்கராசாவின் தலைமையில், ஆலயகுரு கு.குணரெட்ணம் நடத்தி வைத்தார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு இவ்வாலயத்தில் சிலம்பு ஓசை கேட்டமையால், அம்மாவட்டத்தில் உள்ள மக்கள் பலர் சென்று சிலம்பின் ஒலியினை கேட்டலானது , அம்பாளின் அற்புத செயலாக கருதப்பட்டு அம்பாளை போற்றி வணங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச ஊடக நிறுவனப் பதவிகளில் முஸ்லிம்கள் முற்றாக புறக்கணிப்பு

## இதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் தட்டிக்கேட்கவேண்டும் என கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 15

**அரசாங்க ஊடக நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன மேற்படி நியமனங்களை ஒருசில தினங்களுக்கு முன்னர் வழங்கினார். இந்த நியமனங்களில் முஸ்லிம் தரப்பு முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.**

ஊடகத்துறையிலும் கல்வித்துறையிலும் ஏனைய கலை, இலக்கிய துறைகளிலும் எத்தனையோ தகுதியான சிரேஷ்டத்துவம் கொண்டவர்களும் கல்வியியலாளர்களும் முஸ்லிம் சமுகத்துக்குள் இருக்கத்தக்கதாக இந்த புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளமை திட்டமிட்ட சதியாகவே முஸ்லிம் சமுகத்தினரால் பார்க்கப்படுகின்றது என அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல வருட காலமாக இலங்கை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்து வந்த புரவலர் ஹாசிம் ஒமரும் இந்த முறை எவ்வித பதவிகளிலும் நியமிக்கப்படவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை பொறுத்தவரை முஸ்லிம் சேவையில் ஐவேளை அதான் ஒலிபரப்புக்கு பெருந்தொகை பணத்தை வழங்கி அனுசரனை வழங்கும் பிரபல ஆடை நிறுவனம் தனது வர்த்தக நாமத்தை பயன்படுத்துவதில்லை. ஆனால் சிங்கள சேவையில் பௌத்த மத நிகழ்ச்சிகளை அனுசரனை இன்றியே நடத்திச் செல்கின்றனர் என சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பலரும் தமது ஆதங்கங்களை பொதுவெளியில் வெளிப்படையாக தெரிவித்து வருகின்றனர்.

அதேபோல் அரச ஊடக நிறுவனங்கள் அனைத்திலும் கடமையாற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களும், கட்டுப்பாட்டாளர்களும், அறிவிப்பாளர்களும் பெருந்தொகையான முஸ்லிம் அனுசரனையாளர்களை நெருங்கி நிகழ்ச்சிகளுக்கு அனுசரனை பெற்றுக் கொடுத்து வருகின்றனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இன்று ஓரளவு நஷ்டமின்றி செயற்படுவதற்கு பிரதான காரணம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அனுசரணைகளே என தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால் இந்த தகவல் திட்டமிட்டு மூடி மறைக்கப்படுகிறது எனும் குற்றச்சாட்டும் இருக்கிறது.

இந்த அரசாங்கத்தின் அமைச்சராக இருக்கும் பிரபல தொழிலதிபரும் பொறியியலாருமான ஹாபீஸ் நஸீர் அஹமட், அதுபோல் ஆளும்தரப்பு, எதிர்தரப்பு மற்றும் சுயாதீன தரப்பு முஸ்லிம் எம்.பிக்கள் இந்த விவகாரத்தில் உடன் தலையீடு செய்ய வேண்டும் என்பதுடன் முஸ்லிம் சமுகத்துக்குரிய நியாயமான நியமனங்களை பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும். முஸ்லிம் சமுகத்துக்குரிய உரிமைகளுக்குள் இந்த நியமனங்களும் உள்ளடங்கும் என்பதை நீங்கள் அறியாதவர்களும் அல்லர். ஆகவே இந்த விவகாரத்தில் உடனடியாக சகல முஸ்லிம் அரசியல்வாதிகளும் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றுள்ளது. (அ)

# எம்.பி. பதவியை இராஜினாமா செய்து சாய்ந்தமருது சலீமுக்கு வழங்குங்கள்!

## அதாவுல்லாவிடம் பகிரங்க வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஜூன் 15

தேசிய காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தனது பாராளுமன்ற உறுப்புரிமையை உடனடியாக இராஜினாமா செய்து, அதனை சாய்ந்தமருது சார்பில் கடந்த பொதுத்தேர்தலில் தேசிய காங்கிரஸ் வேட்பாளராக களமிறங்கியிருந்த சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம். சலீமுக்கு வழங்கவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் பகிரங்கமாக வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

சாய்ந்தமருது நகர சபை கோஷம் என்பது இனிமேல் முன்னாள் அமைச்சர் ஏ.எல். எம். அதாவுல்லாவால் முடியாத விடயம் என்பதை சாய்ந்தமருது மக்கள் நன்கு அறிந்துவிட்டனர். நகர சபை என்ற கோஷத்தை கொண்டு இனியும் சாய்ந்தமருது மக்களை ஏமாற்றவும் முடியாது. அரசியல் செய்யவும் முடியாது. அது யாராக இருந்தாலும் சரியே.

நகர சபை கோஷத்தை வைத்து நன்கு சாய்ந்தமருது மக்களை ஏமாற்றி பல ஆயிரக்கணக்கான வாக்குகளை பெற்ற முன்னாள் அமைச்சர் ஏ.எல். எம். அதாவுல்லா பாராளுமன்ற உறுப்பினரானார். ஏமாற்றமான வர்த்தமானி வெளியிட்டு அம்மக்களை ஏமாற்றினார். இனியும் அவரால் ஏமாற்றவே முடியாது. சாய்ந்தமருது மக்கள் மிகத் தெளிவாக உள்ளனர்.

சாய்ந்தமருது மக்களின் வாக்குகளால் பாராளுமன்றம் சென்ற முன்னாள் அமைச்சர் ஏ. எல்.எம். அதாவுல்லா நகர சபையை பெற்றுத்தர முடியாத இன்றைய சூழ்நிலையில் தமது எம்பி பதவியை இராஜினாமா செய்து சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல். எம். சலீமுக்கு அந்த பதவியை வழங்க முன்வர வேண்டும். இன்னும் சிறு காலத்துக்கு இருக்கப் போகும் இந்த பாராளுமன்ற காலத்துக்காகவாவது அந்த எம்பி பதவியை வழங்கி தனது நன்றி உணர்வை வெளிப்படுத்த பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய காங்கிரசின் தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா முன்வர வேண்டும்-என்றார். (அ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 76 யானைகள் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 76 யானைகள் இறந்துள்ளதுடன், 149 யானைகள் காயமடைந்துள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட காணி விவாகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபார் திருமதி. நவரூபரங்சனி தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் காட்டு யானைகள் 660 சொத்துகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, உன்னிச்சை 10 ஆம் கட்டை கிராமத்தில் நீண்ட காலமாக இயங்கிவந்த கோழிப்பண்ணை காட்டு யானை தாக்கத்தால் முற்றாக சேதமடைந்தமையால், குறித்த பண்ணையையே இழுத்து மூடிவிட்டனர்.

மேலும், குறித்த கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் தொடர்பாக அகில இலங்கை விவாசாயிகள் சம்மேளன மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேள் கருத்து வெளியிட்டார். (அ)

# உக்ரைனில் கொத்துக் குண்டுகளால் மக்களை கொன்று குவித்தது ரஷ்யா!

## சர்வதேச மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு



நியூயோர்க், ஜூன். 15

வடகிழக்கு உக்ரைன் நகரமான கார்கிவில் ரஷ்யா கொத்துக் குண்டுகள் (cluster bombs) உள்ளிட்ட தடை செய்யப்பட்ட ஆயுதங்களைக் பயன் படுத்தி கண்மூடித் தனமான தாக்குதல்களை நடத்தி நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கொன்றுள்ளமை புதிய ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் 9என்210/9என்235 வகை கொத்துக் குண்டுகள் மற்றும் சிதறி வெடித்து சுற்றுச் சூழலில் பெரும் சேதங்களை ஏற்படுத்தக்கூடிய வகையான வெடி பொருட்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

இதேவேளை, கார்கிவில் உள்ள குடியிருப்புப் பகுதி களில் ரஷ்ய தாக்குதல்களுக்கு உள்ளான ஐந்து தனித்தனி தளங்களை ஆய்வு செய்த பி.பி.சி. இங்கு கொத்துக் குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்ட மைக்கான அடையாளங்களைக் கண்டுள்ளதாக தெரி வித்துள்ளது.

இந்த இடங்களில் எடுக்கப்பட்ட படங்களை மூன்று வெடிபொருட்கள் தொடர்பான நிபுணத்துவம் பெற்ற வர்களிடம் காட்டியபோது அவை சர்ச்சைக்குரிய, தடை செய்யப்பட்ட கொத்துக்கு குண்டுகளுடன் பொருந்துவதாக அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் பி. பி.சி. குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட பகுதிகளில் அடையாளப்படுத்தப்பட்ட சேதங்கள் கொத்துக் குண்டுகளால் ஏற்பட்டவை என்பதை கண்டறிய முடிவதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆயுதப் பிரிவு மூத்த ஆராய்ச்சியாளர் மார்க் ஹிஸ்னி கூறினார்.

இதேவேளை, கார்கிவ் நகரில் வசிப்பவர்கள் சிலர் அனுப்பிய கண்காணிப்பு கமெரா காட்சிகளிலும் கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமைக்காக ஆதரங்களை காண முடிவதாக அவற்றை ஆராய்ந்த முன்னாள் பிரிட்டிஷ் இராணுவ கேணலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆயுத நிபுணருமான ஹமிஷ் டி பிரெட்டன் கார்டன் கூறினார்.

உலகில் 120 க்கும் மேற்பட்ட நாடுகள் கொத்துக் குண்டுகளை போரில் பயன்படுத்துவதை தடை செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. எனினும் இந்த ஒப்பந்தத்தில் ரஷ்யா மற்றும் உக்ரைன் கையெழுத்திட வில்லை என்றாலும் இவற்றை பாவிப்பது சட்டவிரோத மாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையே உக்ரைனில் கொத்து குண்டுகளைப் பயன்படுத்துவதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக் களை ரஷ்யா முன்பு மறுத்தது. ரஷ்யப் படைகள் இராணுவ இலக்குகளை மட்டுமே தாக்குவதாகவும் ரஷ்யா தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)




# டான்பாஸில் ஆயுதக் கிடங்கு ரஷ்யாவால் முற்றாக அழிப்பு

கீவ், ஜூன். 15

உக்ரைன் கிழக்கு - டான்பாஸ் பிராந்தியத்தில் உள்ள உக்ரைனின் ஆயுத கிடங்கை நவீன ஏவுகணைகள் மூலம் தாக்கி அழித்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதக் கிடங்கில் உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் வழங்கிய ஆயுதங்கள் இருந்ததாகவும் அவை அனைத்தும் முற்றிலுமாக அழிக் கப்பட்டு விட்டதாகவும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

உக்ரைனில் டான்பாஸ் பிராந்தியத்தில் உள்ள முக்கிய தொழில் நகரமான செவிரோடொனெட்ஸ்க் நகரில் உக்கிர சண்டை நடைபெற்று வருகிறது.

செவிரோடொனெட்ஸ்க் கிட்டத்தட்ட ரஷ்ய படை களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. எனினும் இந்த நகரின் ஒரு சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட் டில் வைத்துள்ள உக்ரைன் படைகள் நகரை முழுமை யாக மீட்டெடுக்க ரஷ்ய படைகளுடன் தொடர்ந்து சண்டையிட்டு வருகின்றன.

ரஷ்யப் படைகள் மூலோபாய கிழக்கு நகரத்தை கைப்பற்றி வருவதால், செவிரோடொனெட்ஸ்க்கான போரில் உயிரிழப்புக்கள் அதிகமாக இருக்கும் என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

டான்பாசுக்கான போர் சந்தேகத்திற்கு இடமின்றி ஐரோப்பாவின் இராணுவ வரலாற்றில் மிகவும் வன் முறையான போர்களில் ஒன்றாக நினைவுகூரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பகுதியில் தினமும் 100 முதல் 200 வரையான உக்ரேனிய படைகள் உயிரிழப்பதாக உக்ரைன் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கியூபாவில் போராடியவர்களுக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை !

ஹவானா, ஜூன். 15

கியூபா அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றதற்காக சிலருக்கு 25 ஆண்டுகள் உட்பட 381 பேருக்கு தண்டனை விதித்துள்ளது.

297 பேர் தேசத் துரோகம், பொதுக் குழப்பம், தாக்கு தல் அல்லது கொள்ளை போன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் நாடான கியூபாவில் சுதந்திரம் வேண்டும் என கோஷமிட்டே நாடு முழுவதும் ஆயிரக் கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், விலைவாசி உயர்வு மற்றும் உணவு மற்றும் மருந்து பற் றாக்குறையை சுட்டிக்காட்டி இந்த மாபெரும் ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

தண்டனை விதிக்கப்பட்டவர்களில் “16 முதல் 18 வயதுடைய 16 இளைஞர்களும்” அடங்குவர் என்று அனைத்தின் அரச தரப்பு சட்டத்தரணி கூறியுள்ளார்.

# வடக்கு புர்கினாபாசோவில் ஆயுததாரிகள் தாக்குதல்!

## 50 பேர் கொலை




வடக்கு புர்கினா பாசோவில் உள்ள ஒரு கிராமத்தில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டதாக அரசாங்க பேச்சாளர் தெரிவித்தார்.

அல்-கொய்தா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் ஆகியவற்று டன் தொடர்புடைய போராளிகள் உள்ள எல்லைப் பகுதிகளில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு இடையில் செனோ மாகாணத்தின் குறித்த பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சனிக்கிழமை இரவோடு இரவாக தாக்கப்பட்டதை அடுத்து, இராணுவம் இதுவரை 50 உடல்களைக் கண்டுபிடித்துள்ளது என அரசாங்கம் கூறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இந்த தாக்குதலைக் கண்டித்துள்ள அதேவேளை நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# மக்ரோன், சோல்ஸ், ட்ராகி மூவரும் கூட்டாக உக்ரைன் செல்லத் திட்டம்?

பாரிஸ், ஜூன். 15

பிரான்ஸின் அதிபர் மக்ரோன், ஜேர்மனியின் சான்சிலர் ஓலாப் சோல்ஸ்

இத்தாலியப் பிரதமர் மரியோ ட்ராகி ஆகிய மூன்று ஐரோப்பியத் தலைவர்களும் கூட்டாக உக்ரைன்

தலைநகர் செல்லவுள்ளனர் எனத் தகவல் வெளி ரகி உள்ளது.

ஜேர்மனியில் இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜி7 நாடு களது தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு முன்பாக உக்ரைனுக்கான விஜயம் இடம்பெறலாம் என்று எதிர்பார்க் ப்ரீகப்படு கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவை முழு அளவில் வெளிப்படுத்தும் நோக்கில் தலைவர்கள் மூவரும் ஒரே சமயத்தில் அங்கு செல்லவுள்ளனர் என்று கூறப்படுகிறது. எனினும் இத் தகவல் அரசுகள் தரப்பில் இன்னமும் உறுதிப்படுத்தப்பட வில்லை.

பாராளுமன்றத் தேர்தலின் முதற்சுற்று வாக்களிப் புக்குப் பின்னர் மக்ரோன் ருமேனியாவுக்குப் புறப்பட் டுள்ளார். சான்சிலர் ஓலாப் சோல்ஸ் ஏற்கனவே பால்டிக் நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர்கள் இருவரும் இணைந்து இத்தாலியப் பிரதமர் சகிதம் கீவ் நகருக்குச் செல்வர் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

உக்ரைன் போர் நாட்டின் கிழக்குப் பகுதியில் மிகத் தீவிரமடைந்துள்ளது.

அங்கு ரஷ்யப் படைகளின் கை ஓங்கிவருகிறது. கிழக்கு டொன் பாஸ் பிராந்தியத்தில் உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சேவேரோ டொனேட்ஸ்க் நகரம் ரஷ்யப் படைகளால் வெற்றிகொள்ளப்படும் நிலையில் இருக்கி றது. நகருக்குச் செல்லும் வீதிப்

## பாலங்கள் உடைக்கப்பட்டு கேந்திர நகரம் துண்டிப்பு!!



பாலங்கள் அனைத்தையும் ரஷ்யப்படைகள் நிர்மூலமாக்கிவிட்டதால் நகரம் வெளித் தொடர்புகளில் இருந்துதுண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உக்ரைன் படைகளின் வெடிமருந் துக் கையிருப்பு தீர்ந்து வருவதாக அங்குள்ள அதிகாரி கள் கூறியிருக்கின்றனர்.

(அ)



## கவாஸ்கரை பின்தள்ளினார் இங்கிலாந்தின் ஜோ ரூட்!

லண்டன், ஜூன் 15

இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் டெஸ்ட் போட்டிகளில் 10,191 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் இந்தியாவின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கரை பின்னுக்குத் தள்ளி அதிக ஓட்டங்களை எடுத்தவர்கள் பட்டியலில் 12ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 4ஆம் நாள் ஆட்டத்தில் 176 ஓட்டங்களை எடுத்து ஜோ ரூட் ஆட்டமிழந்தார். இதன்படி சுனில் கவாஸ்கரின் 10,122 ஓட்டங்களை அவர் தாண்டியுள்ளார். இதன் மூலம் தர வரிசையில் 12ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். கவாஸ்கர் 13ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

டெஸ்ட் போட்டியில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் சச்சின் டெண்டுல்கர் 15,921 ஓட்டங்கள், ரிக்கி பொண்டிங் 13,378 ஓட்டங்கள், ஜக்கலிஸ் 13,289 ஆகியோர் முதல் மூன்று இடங்களில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒருநாள் உலகக் கிண்ண தொடரிலும் இலங்கை தகுதி சுற்றில் ஆடும் நிலை!



துபாய், ஜூன் 15

அடுத்த வருடம் இந்தியாவில் நடக்கவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் தகுதி சுற்றில் விளையாடியே சுப்பர் லீக் சுற்றுக்கு முன்னேற வேண்டிய நிலையில் இலங்கை அணி உள்ளது.

முன்னதாக கடந்த ஆண்டு நடந்த இருபது - 20 உலகக் கிண்ணத்திலும் இலங்கை அணி தகுதி சுற்றிலேயே இடம் பெற்றது. இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணத்திலும் தகுதிகாண் சுற்றி லேயே இலங்கை அணி விளையாட வேண்டியுள்ளது.

ஒருநாள் உலகக் கிண்ண சுப்பர் லீக்கில் இதுவரை 6 தொடர்களில் விளையாடியுள்ள இலங்கை 62 புள்ளிகளுடன் 9ஆம் இடத்தில் இருக்கிறது. இந் நிலையில் இரண்டு தொடர்களே இலங்கைக்கு மீதம் இருக்கிறது. நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகளுக்கு எதிரான தொடர்கள் முறையே அந்நிய மண்ணிலும் சொந்த மண்ணிலும் நடைபெறவுள்ளன. இந்த இரண்டு தொடர்களில் வெற்றிபெற்றாலும் 2023 உலகக் கிண்ணப் போட்டிக்கு இலங்கை நேரடியாக தகுதிபேறுமா என்பது சந்தேகம்.

சுப்பர் லீக் அணிகள் நிலையில் முதல் 8 இடங்களைப் பெறும் அணிகளே உலகக் கிண்ண போட்டியில் நேரடியாக விளையாட தகுதி பெறும்.

இந்நிலையில், நேற்று ஆரம்பமான அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் உலகக் கிண்ண சுப்பர் லீக்குடன் சம்பந்தப்படாத - இரு தரப்பு தொடர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ. பி. எல். ஒளிபரப்பு உரிமம் 163,077 கோடி ரூபாய்க்கு ஏலம்!

INDIAN PREMIER LEAGUE

புதுடில்லி, ஜூன் 15

ஐ. பி. எல். போட்டியின் அடுத்த 5 ஆண்டுகளுக்கான தொலைக்காட்சி மற்றும் எண்ம (டிஜிற்றல்) ஒளிபரப்பு உரிமம் 44 ஆயிரத்து 75 கோடி இந்திய ரூபாய்க்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 77 கோடி ரூபாய்க்கு ஏலம்போனது.

திங்கட்கிழமை இணைய வழியில் இடம்பெற்ற இந்த ஏலத்தில், ஐ. பி. எல். போட்டியை இந்திய துணைக் கட்டத்தில் 2023 முதல் 2027 வரையிலான 5 ஆண்டுகளுக்கு தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்வதற்கான உரிமத்தை 'டிஸ்னி ஸ்ரார்' நிறுவனம் 23 ஆயிரத்து 575 கோடி இந்திய ரூபாய்க்கும், எண்ம ஒளிபரப்பு உரிமத்தை வியோகாம் 18' நிறுவனம் 20 ஆயிரத்து 500 கோடி இந்திய ரூபாய்க்கும் வாங்கியுள்ளன.

இதுவரை தொலைக்காட்சி மற்றும் எண்ம ஒளிபரப்பு உரிமம் சேர்த்து வழங்கப்பட்டு வந்த நிலையில், இம்முறை இரண்டும் பிரித்து விநியோகிக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சிக்கான உரிமத்தின் படி, 5 தொடர்களின் 410 போட்டிகள்ஒளிபரப்பு செய்யும் உரிமம் கிடைக்கிறது. இதில், ஒரு போட்டிக்கான ஒளிபரப்பு மதிப்பு 57.5 கோடி இந்திய ரூபாயாக உள்ளது. அதுவே எண்ம உரிமத்தில் ஒரு போட்டிக்கான ஒளிபரப்பு மதிப்பு 50 கோடி இந்திய ரூபாயாக இருக்கிறது.

தொலைக்காட்சி உரிமம் 'பக்கேஜ் - ஏ' எனவும், எண்ம உரிமம் 'பக்கேஜ் - பி' எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதுதவிர, குறிப்பிட்ட சில போட்டிகளின் எண்ம ஒளிபரப்பு உரிமமானது "பக்கேஜ் - சி' எனவும், வெளிநாட்டு தொலைக்காட்சி மற்றும் எண்ம ஒளிபரப்பு உரிமமானது 'பக்கேஜ் - டி' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த 'சி' மற்றும் 'டி' உரிமத்துக்கான ஏலம் நேற்று இடம் பெற்றது. இதன் முழுவிவரங்கள் வெளியாகவில்லை. (ஐ)

## ரென்னிஸ் தரவரிசை; ஜோகோவிச்பின்னடைவு



லண்டன், ஜூன் 15

ரென்னிஸ் தரவரிசையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக முதல் இரண்டு இடங்களுக்குள் இருந்த ஜோகோவிச் முதன்முறையாக பின்னடைவை சந்தித்துள் ளார்.

சர்வதேச ரென்னிஸ் தரவரி சைப் பட்டியலை ஏ. ரி. பி. வெளியிட்டுள்ளது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜொகோ விச்சை பின்னுக்கு தள்ளி ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவர், 7,950 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறினார்.

ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் 7,075 புள்ளிகளுடன் 2ஆம் இடத்துக்கு முன்னேறினார்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக முதல் இரண்டு இடங்களுக்குள் இருந்த சேர்பியாவின் ஜொகோவிச் 6,770 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்துக்கு பின்தங்கினார்.

பிரெஞ்சு ஓப்பனில் பட்டம் வென்ற ஸ்பெயினின் ரபேல் நடால் 4ஆது இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடர் போர்த்துக்கல் அதிர்ச்சி தோல்வி!

லிஸ்பன், ஜூன் 15

நடப்பு ஆண்டில் தோல்வியே காணாத போர்த்துக்கல் அணி சுவிற்சர்லாந்திடம் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடர் நடக்கிறது.

இதில், சுவிற்சர்லாந்துக்கு எதிரான போட்டியில் போர்த்துக்கல் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.

நடப்பாண்டில் இதுவரை தோல்வியை சந்தித்திருக்காத போர்த்துகல் அணிக்கு, 5 போட்டிகளில் இது முதல் தோல்வியாகும். தொடர்ந்து விளையாடி வருவதன் காரணமாக, திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் கிறிஸ்ரியானோ ரொனால்டோவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்தது. இந்தப் போட்டியில் சுவிற்சர்லாந்து அணிக்காக ஹரிஸ் செபெரோவிச் முதல் நிமிடத்திலேயே கோல் அடித்தார்.

போர்த்துக்கல்லின் இந்தத் தோல்வியால், லீக் 'ஏ'வின் குறூப் 2 பட்டியலில் ஸ்பெயின் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. (ஐ)



# பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்தால் பாணின் விலை 1500 ரூபாவாக உயரும்

## தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15

பணவீக்கம் இவ்வாறு தொடர்ந்தும் அதிகரிக்கும் பட்சத்தில் டிசெம்பர் மாதத்துக்குள் சராசரியாக ஒரு இறாத்தல் பாண் 1500 ரூபாவாக இருக்கும் என தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

இன்று 100 ரூபாவில் ஓட்டோவில் பயணம் செய்வது டிசெம்பர் மாதத்தில் 1790 ஆக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

உயர் பணவீக்கம் மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்றும் அதனை வளர்ச்சியடையாமல் தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இந்திய உரத்தின் தரம் பிரச்னை; கலந்துரையாடுவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 15

இந்திய கடன் உதவித்திட்டத்தின் கீழ் இந்தியாவில் இருந்து கிடைக்கும் உரத்தின் தரம் தொடர்பில் பிரச்னை உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை அடுத்து அது பயன்படுத்தும் விதம் குறித்து கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ள 65, 000மெற்றிக் தொன் யூரியாவை பயிர்களுக்கு பயன்படுத்தும் முறைமை தொடர்பில் விவசாய அமைச்சுடன் கலந்துரையாட தீர்மானித்துள்ளதாக விவசாய பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

இந்த வாரம் குறித்த சந்திப்பை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

எந்தச் சூழ்நிலையில் நாட்டின் உரத்தின் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தாம் இடமளிக்க போவதில்லை எனவும் விவசாயப் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் இந்திய உரத்தின் தரம் தொடர்பில் பிரச்னை உள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தர நிறுவகத்தினால் உரத்திற்காக வழங்கப்பட்டுள்ள தரத்திற்கு அமைய யூரியா உரத்தில் பய்யுரேட் அளவு நூற்றுக்கு ஒன்றாக காணப்படவேண்டும். எனினும் இந்தியாவின் தரக் கட்டுப்பாடு நூற்றுக்கு 1.5 என்ற அளவில் உள்ளமையினால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் உரத்தின் தரம் தொடர்பில் பிரச்னை காணப்படுவதாக ஜே.வி.பியின் தலைவர் குறிப்பிட்டார்.

குறித்த உரம் கொமர்ஷர் உர நிறுவனத்தின் ஊடாக இலங்கைக்கு கொண்டு வரப்படுகிறது.

இந்தநிலையில் குறித்த விடயம் தொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைவர் மெத்சிறி விஜேகுணவர்தன கருத்து தெரிவிக்கையில், உர ஆலோசனைக் குழு, விவசாயப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் தரம் தொடர்பில் வழங்கும் அறிவுறுத்தல்களுக்கு அமையவே அவற்றை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள், எரிவாயுவுக்கு அவசியமான டொலரை வழங்கப் பிரதமர் இணக்கம்

கொழும்பு, ஜூன் 15

எரிபொருள் மற்றும் எரிவாயு என்பவற்றுக்கு அவசியமான டொலரை வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இணங்கியுள்ளார்.

வங்கிகளுக்கு இடையில் நிலவிய தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டணங்களை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த தினங்களில் நாட்டின் பல பகுதிகளில் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

சில இடங்களில் அமைதியின்மை சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

ஊறுகொடவத்தை பகுதியில் எரிபொருள் கோரி மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டதோடு அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

இதேவேளை, லிட்ரோ நிறுவனத்தின் எரிவாயு விநியோகம் தொடர்ந்தும் நிறுத்தப்பட்டுள்ளது.

3,900 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பலுக்கு கட்டணம் செலுத்த முடியாமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. 7 நாட்களாக குறித்த கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்படாமல் உள்ளது. (அ)

# நாணய நிதியத்தின் பேச்சின் பின் இலங்கைக்கு அமெரிக்கா உதவி!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு அமெரிக்க உதவி செய்யும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன் தினம் திங்கட்கிழமை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அந்தோனி பிளின்கனுடன் தொலைபேசியில் உரையாடினார்.

இந்த சந்திப்பு குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர், சர்வதேச நாணய நிதியத்துடன் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் தற்போதைய நிலை குறித்து தான் இதன்போது விளக்கமளித்ததாக பதிவிட்டுள்ளார்.

இரு நாடுகளும் நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுகள் முடிவடைந்த பின்னர் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கும் இலங்கையில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அந்தோனி பிளின்கன் ஒப்புக்கொண்டார் என பிரதமர் கூறியுள்ளார். (அ)

# வவுனியா சிறையிலிருந்து ஆறு கைதிகள் விடுதலை!

வவுனியா, ஜூன் 15

பொசன் தினத்தினை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் வவுனியா விளக்கமறியில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுடன் தடுத்து வைக்கப்பட்ட 6 சிறைக்கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட நபரொருவருக்கு பிறிதொரு வழக்கும் இருந்தமையினால் அவர் மீண்டும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

இதன்போது வவுனியா விளக்கமறியில் சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன், பிரதி அத்தியட்சகர் சந்திரசிறி உட்பட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ)


# வீட்டுத் தோட்டம் செய்வோம்



வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!

போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

www.dantv.tv

## உண்மைகளை....

படுகொலைசெய்யப்பட்டவர்களின் உறவினர்களின் பங்களிப்புடன் நினை வேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன் னம்பலம் உட்பட்ட தமிழ் தேசிய ஆதர வாளர்கள், படுகொலைசெய்யப்பட்டவர் களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட் டதுடன் நினைவுரை நடைபெற்றது. இங்கு தொடர்ந்து உரையாற்றிய பாரா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்-

தமிழ்த் தேசத்திற்குரிய நீதிக்கான போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ள இந்த சூழலில் தமிழினப் படுகொலை நடைபெற்ற இந்த வாரத்தில் இலங்கை அரசாங்கம் தனது நாட்டின் வங்குரோத்து தன்மையினை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தங்களது இனத்துக்கு மட்டும்தான் இந்த நாடு என நினைத்து தமிழினத்தை அடக்கியொடுக்கி அழிப்பதற்கு எடுத்த முயற்சியின் ஒட்டுமொத்த சுமைதான் ஒட்டு மொத்த பொருளாதாரத்தினையும் அழித்து வங்குரோத்து நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இன்றாவது சாதாரண சிங்கள அப் பாவி மக்கள் தங்களது தலைவர்கள் செய்த அநியாயங்களை இனவாத அடிப்படை யில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அநியாயங்களை இன அழிப் பினை சரியான வாகையில் புரிந்துகொண் டுள்ளனர்.

இனவாதத்தினை காட்டி தனது சொந்த தேசத்தின் சொத்துகளை சூறை யாடி தங்களது நலனை மட்டும் பேணிய தலைமைத்துவங்கள் 74ஆவது ஆண்டுக்கு பின்னர் அம்பலப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த உண்மையினை சாதாரண சிங்கள மக்கள் விளங்கிக்கொண்டு தமிழ்த் தேசத் தின் இருப்பினை அங்கீகரித்து, தமிழ் தேசமும் சிங்கள தேசமும் சேர்ந்த நாடாக இலங்கை அங்கீகரிக்கப்பட்டு ஒரு முற் போக்கு பாதைக்கு இட்டுச்செல்வதற்கு சிங்கள தேசம் முன்வரவேண்டும். அவ் வாறான ஒரு அடிப்படையான மாற்றம் வரும்போதுதான் இந்த இலங்கை தீவின் முழுமை அடையக்கூடியதாகயிருக்கும்.

இலங்கை அரசு வங்குரோத்து நிலை மைக்கு தள்ளப்பட்டுள்ள இந்த சூழ்நிலை யில் புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களின் உழைப்பு இலங்கை அரசின் உழைப்பினை விட அதிகமாகவுள்ள நிலையில் நல்லிணக் கத்தினை ஏற்படுத்த தமிழ்த் தேசத்தின் இருப்பினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் இலங்கையின் அமைவினை மாற்றியமைப்பதன் ஊடாக சிங்கள தேச மும் தமிழ் தேசமும் இணைந்து இந்த நாட்டை ஆக்கபூர்வமான வகையில் கட்டியெழுப்புவதற்கு தமிழினம் தயா ராகயிருக்கின்றது-என்றார். (அ)

## மேலும் புதிய....

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டவை வருமாறு,

"இந்த மூன்று வாரங்கள் எரிபொரு ளுக்கு மிகவும் கடினமான காலமாகும். எரிவாயு மற்றும் எரிபொருளுக்காக மக்கள் வரிசைகளில் நிற்பது தெரிகிறது. தற்போது சமையல் எரிவாயு ஏற்றிச் செல்லும் கப்பல் ஒன்று வந்துள்ளது. அதிலிருந்து, 3 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் எரிவாயு இறக்கப்படுகிறது. இந்த எரிவாயு மருத்துவமனைகள், ஹோட் டல்கள் மற்றும் தகன சாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

அடுத்த எரிவாயு கப்பலில் இருந்து 4 மாதங்களுக்கு தேவையான எரிவாயுவைப் பெற முடியும். இதற்கு 14 நாள்கள் ஆகும். ஆனால், ஒரு கப்பலை இலங்கைக்கு கொண்டு வருவோம் என்று நம்புகிறோம்.

எரிபொருளைத் தொடர முடிவு செய் தோம். ஆனால், தற்போதைய தேவையில் 50 சதவீதத்தை மட்டுமே தக்கவைக்க முடியும். மின் உற்பத்தி, போக்குவரத்து மற்றும் பல அத்தியாவசிய சேவைகளுக் கும் இது முன்னுரிமை அளிக்கிறது.

எங்களிடம் 7 நாள்களுக்கு மட்டுமே எரிபொருள் இருப்பு உள்ளது. ஆனால், இம்மாதம் 16ஆம் திகதி 40 ஆயிரம் மெற் றிக் தொன் டீசலை ஏற்றிக்கொண்டு கப் பல் ஒன்று நாளை (இன்று) வந்தடைய வுள்ளது.

மேலும், பெற்றோல், டீசலுக்காக இரண்டு எரிபொருள் தாங்கிகள் வாங் கப்படவுள்ளன. தற்போதைய நிலவரப் படி, இந்த மாத இறுதிக்குள் எரிபொருள் தாங்கிகளை கொள்முதல் செய்ய உள் ளோம். அடுத்த மாதமும் இரண்டு எரி பொருள் தாங்கிகளையும் வாங்கவுள் ளோம். இதன்பின், இந்தியாவுடன் கையெழுத்தான புதிய ஒப்பந்தத்தின்படி, 4 மாதங்களுக்கு தேவையான எரி பொருளை பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால், இந்த எரிபொருள் 50 சதவீத தேவையின் அடிப்படையில் வழங்கப் படுகிறது. எரிபொருளைப் பெறும்போது எங்களுக்கு வெளிநாட்டு நாணயப் பிரச்னை ஏற்பட்டது. அந்தப் பிரச்னை யைப் பற்றி பேசினால் ஓர் அரச வங்கியி லும் ஒரு ரூபாய் இல்லை. பின்னர் அமைச் சரவைக்குச் சென்று பணத்தை அச்சிடு வதற்கான ஒப்புதலைப் பெற்றேன். இத னால்தான் புதிய வரி விதிக்கப்பட்டது. மேலும் பல வரிகளும் விதிக்கப்படவுள் ளன.

சர்வதேச நாணய நிதியம் (IMF) இந்த ஆண்டு இறுதிக்குள் ரூபாய் பற்றாக் குறையை முடிவுக்கு கொண்டு வரவும், அன்னிய கையிருப்பு பிரச்சனையை போக் கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்புகினேறோம் -என்றுள்ளது. (ஐ)

## நூற்றுக்கணக்...

படகுகளை இலங்கை கடற்படையினர் இடைமறித்துள்ளனர். ஆனால், இரண்டு படகுகள் அவுஸ்திரேலிய கடற்பரப்புக் குள் நுழைந்துள்ளன. நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, முடிவடையும் நிலையில் மருந்துகள், உணவுப்பொருட்கள், எரிபொருடகள் காணப்படுவதால் மேலும் பலர் அவுஸ்தி ரேலியாவுக்கான பயணத்தை ஆரம்பிப் பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் நிறைந்த படகுகளை அலைமோதும் கடலில் இலங்கை கடற்படையினர் தடுத்துநிறுத்தும் காட்சிகள் ஏபிசிக்கு கிடைத்துள்ளன. இந்த படகுகளில் இருந்த பலருடன் ஏபிசி கதைத்துள்ளது புதியஅரசாங்கம் தங்களை அவுஸ்திரேலி யாவுக்குள் அனுமதிக்கும் என தெரிவிக் கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ள னர்.

தொழில் கட்சி புகலிடக் கோரிக்கை யாளர்கள் தொடர்பில் முன்னைய அர சாங்கத்தின் கொள்கைகளுக்கு ஒப்பான கொள்கைகளேயே பின்பற்றுகின்ற போதிலும், புதிய அரசாங்க மாற்றத்தை ஆள் கடத்தல்காரர்கள் தங்களுக்கு சாதக மாக பயன்படுத்துகின்றனர். அவுஸ்திரே லியாவின் கொள்கை உறுதியானது என அவுஸ்திரேலிய எல்லைக் காவல்படை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத மாக படகில் செல்பவர்கள் அங்கு நிரந் தரமாக தங்க அனுமதிக்கப்படமாட்டார் கள் என அவுஸ்திரேலிய எல்லை காவல் படை தெரிவித்துள்ளது.

## அமைச்சரவை....

தொடர்பான சில கருத்துப் பரிமாற்றங் கள் அரசு மட்டத்தில் இடம்பெற இருக் கின்றன என்றும், அதன் பின்னர் அடுத்த திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சர வைக் கூட்டத்தில் இவ்விடயம் பரிசீலிக் கப்படும் என்றும் அமைச்சரவைக் கூட் டத்தில் தெரிவிக்கப்பட்டது என அறிய வந்தது. (அ)

# வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து இன்றுடன் 32 வருடங்கள் நிறைவு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

வலி. வடக்கிலிருந்து மக்கள் விரட் டப்பட்டு இன்றுடன் 32 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இதையொட்டி இன்று புதன்கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், நாட்டில் பஞ்சம் - பட்டினி தலைவிரித்தாடத் தொடங்கு கின்றது. வலி. வடக்கில் வளம்கொழிக் கும் விவசாயப் பூமிகளை ஆக்கிரமித்து இன்னமும் தம் வசம் படைத்தரப்பு வைத்துள்ளது. அந்தக் காணிகளுக்குச் சொந்தக்காரரான எமது மக்கள் அழுது அழுது ஏங்கிய கண்ணீர் - அவர்களின் சாபங்கள்தான் நாட்டின் இந்த நிலை மைக்குக் காரணம். இப்போதாவது அவர் களின் காணிகளை விடுவித்து சாபவி மோசனம் அடையுமாறு கோருகின் றோம் என்று வலி. வடக்கு மீள்குடி யேற்ற புனர்வாழ்வு சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நாட்டின் ஒரு பகுதி மக்களே, 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலிகாமம் வடக்கிலிருந்து விரட்டப்பட்டனர். சொந்த மண்ணுக் குச் செல்வோம் என்ற அவர்களின் எதிர் பார்ப்புக்கள் ஏமாற்றமாகி 32 வருடங்கள் நிறைவுறுகின்றன. படைகள் வல்வந்தமா கக் கைப்பற்றிய எமது பூமியில் 6 ஆயி ரத்து 500 ஏக்கரை நிரந்தரமாக கபளீகரம் செய்யும் நோக்குடன் 2013ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எமது போராட்டங்களாலும், தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றத்தாலும் சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் மீள ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப் படைக்கப்பட்ட நிலத்திலும் 500 ஏக்கரை படைத் தரப்பும், பொலிஸாரும் இன்ன மும் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றனர்.

போரே நடக்காத எமது பிரதேசங் களை மீள ஒப்படைக்கும்போது எங்கள் வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள் என்று அனைத்துச் சொத்துக்களையும் இடித்தழித்து தரைமட்டமாக்கியே வழங்கினார்கள். நாம் காணி விடுவிப் புக்காக போராட ஆரம்பித்த பின்னர் தான் எமது சொத்துக்களை அழித்து துவம்சம் செய்தார்கள். அகதிகளாக அலைந்த நாங்கள், சொந்த மண்ணுக்குத் திரும்பியும் வீடு வாசல்கள் இல்லாது இருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தின் தங்கம் என்று சொல்லப்படுகின்ற பலாலியின் வளம் கொழிக்கும் விவசாயக் காணிகள் இன் னமும் விடுவிக்கப்படவில்லை. மீன் வளம் நிறைந்த மயிலிட்டிக் கிராமத்தின் அரைவாசிப் பகுதி விடுவிக்கப்பட வில்லை. எங்கள் நிலங்களை ஆக்கிர மித்துள்ள படைத்தரப்பு தாங்கள் விவசாயம் செய்கின்றார்கள். நாங்கள் பட்டினியால் சாக அவர்கள் எங்கள் நிலங்களில் அறுவடை செய்து தங்கள் வயிறு வளர்க்கின்றார்கள்.

தென்பகுதியில் கடந்த மே 9ஆம் திகதி கஞேபரத்தில் அரசியல்வாதிகள் பலரின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட் டன. அவர்கள் சொத்துக்களை இழந்து ஒரு மாதத்துக்குள்ளேயே இழப்பீடு தருமாறு ஓலமிடுகின்றார்கள். ஆனால், எங்கள் சொத்துக்களை இடித்து தரை மட்டமாக்கி வாழ்க்கையை நடுவீதிக்கு கொண்டு வந்தவர்களே அவர்கள்தான். எங்களுக்கு இழப்பீடும் இல்லை மிகுதிக் காணி விடுவிப்பும் இல்லை.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது உண்மைதான். நாங்கள் அகதிகளாக அல்லல்படுகின் றோம். அவஸ்தைப்படுகின்றோம். தினம் தினம் கண்ணீர் விடுகின்றோம். எங் களின் கண்ணீரும், சாபமும் அவர்களைச் சும்மாவிடாது.

நாடே பட்டினியால் சாவடையும் இந்த நிலையில், வளம் கொழிக்கும் எங்கள் மண்ணை விடுவித்து, எங்களின் சாபத்திலிருந்து விமோசனம் பெறுமாறு, ஆட்சியாளர்களைக் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

## சமுர்த்தி குடும்பங்களுக்கு ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

கொழும்பு, ஜூன். 15

உலக வங்கியின் ஒத்துழைப்பின் கீழ் நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக நிதி உதவியை வழங் கும் நோக்கில் 03 மாத கால வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக சமுர்த்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் கீழ் குடும்ப மொன்றுக்கு மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்காக 5,000 ரூபா முதல் 7,500 ரூபா வரையான நிதி உதவி வழங்கப்படும் என சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார். (அ)

## பலாலி....

மூலம் 800 மில்லியன் டொலர் வருமா னம் கிடைக்கப் பெறக்கூடும் என்று மதிப் பிடப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு இந்தியா விலிருந்து சுற்றுலாப் பயணிகளை அழைப் பதற்கான நடவடிக்கைகளை முன்னெ டுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோ சனை வழங்கிய பிரதமர் ரணில் விக்கிர மசிங்க, பலாலி விமான நிலையத்தின் செயல்பாடுகளை மீண்டும் ஆரம்பிப் பதற்கான நடவடிக்கைகளை முன்னெ டுக்குமாறும் உத்தரவிட்டார்.

350 கோடி டொலர் வருமானத்தை எதிர்பார்க்கும் இலங்கை, 2025 ஆம் ஆண்டளவில் சுமார் 25 இலட்சம் சுற்று லாப் பயணிகளை ஈர்க்கும் என நம்பப் படுகிறது. (ஐ)

## கொடிகாமம்....

3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத் தில் உயிரிழந்தவர் அடையாளம் காணப் படவில்லை.

உயிரிழந்தவரை அடையாளம் காண உதவுமாறு கொடிகாமம் பொலிஸார் கோரியுள்ளனர். தகவல் தெரிந்தவர்கள் 026 205 0222 என்ற தொலைபேசி இலக் கத்துக்கு அழைப்பு எடுத்து தெரிவிக்கு மாறும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கொடிகா மம் பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ஐ-2)

## மேலும்....

லேயே, மேலும் 50 கோடி டொலரை இந்தியாவிடம் இலங்கை கடனாகக் கோருகிறது. இந்தியாவின் எக்ஸிம் வங்கியிடம் கடனைப் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எனினும், இது குறித்து இந்தியாவின் உத்தியோகபூர்வ முடிவு அறிவிக்கப்பட வில்லை. (ஐ)

## வெள்ளிக்கிழமை....

றாக்குறையால் பொதுப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள் தங்கள் சொந்த வாகனங் களில் பயணம் செய்வதிலும் சிரமம் ஏற் பட்டுள்ளது.

இந்நிலைமை காரணமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விசேட விடுமுறை வழங்கி அவர் களை வீட்டுத் தோட்டம் அல்லது பிற விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பொருத்தமானதாக தோன்று கிறது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான யோசனை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை அமைச்சரினால் முன்வைக் கப்பட்டது. (அ)

# சாய்ந்தமருதில் டெங்கு அபாயம்

அம்பாறை, ஜூன்15

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவு அதிகமான டெங்கு நுளம்பு பரவும் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இனங்காணப்பட்டுள்ளதாகவும், டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் அவர் கேட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள் மற்றும் மதஸ்தலங்களில் அதிகமான டெங்கு நுளம்பு பரவும் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளதாகவும் எதிர்காலத்தில் மிகவும் அபாயமான நிலை ஏற்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீடுகள், நீர் கசிவு ஏற்படும் இடங்கள், மலசல கூடங்கள் போன்றவற்றிலும் டெங்கு நுளம்புகளின் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு டெங்கு நோயினால் பலர் இறந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சில கிராம சேவகர் பிரிவு கள் சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுமாறும் இதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கு ஒழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கி யுள்ள குப்பைகள், நீர் தங்கி யுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம்கொடுக்காத வகையில் சுத்தமாக தமது இடங்களை வைத்து கொள்ள வேண்டும்.

மேலும், டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக் காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் எச்சரித்துள்ளார். (அ)









# நாட்டை நன்றாக ஆள முடியாவிட்டால் ஆட்சியாளர்கள் பதவி விலகுவது மேல்!

## பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

"நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள், பதவிகளில் நீடிக்காது, அதிலிருந்து விலக வேண்டும்." - என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

"இலங்கையை ஆசியாவின் ஆச்சர்யமாக்குவோம் என்றனர். இன்று யாசகம் பெறும் நிலையில் உள்ளோம். சுபீட்சத்தின் நோக்கு என்றார்கள், சுபீட்சம் எங்கே" எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கு சேவையாற்றவே அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த அதிகாரத்தை மக்களுக்கு எதிராக பயன்படுத்தக்கூடாது. மக்களுக்கு சேவையாற்ற முடியாவிட்டால் விலகுவதே சிறந்த செயலாக அமையும். மே 09 ஆம் திகதி சம்பவத்தை அனுமதிக்கமாட்டோம். கொலைகள் மற்றும் வன்முறைகளைக் கண்டிக்கின்றோம். ஆனால் அந்த வன்முறை எங்கிருந்து ஆரம்பமா னது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

# இலங்கை சிறுவர் மத்தியில் போசாக்கின்மை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

நாளுக்கு நாள் அதிகரிக்கும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பால் நாட்டிலுள்ள 17 வீதமான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியுடன் மக்கள் உணவை பெற்றுக்கொள்ள ஏற்பட்டுள்ள தடையே இந்த நிலைக்கு காரணம் என அவர்கள் தெரிவித்துள்ளனர். ஐந்து வயதுக்குட்பட்ட இரண்டு இலட்சம் சிறுவர் களும், ஏழு இலட்சம் பாடசாலை மாணவர்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவின் பிரதான ஊட்டச்சத்து நிபுணர் வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலாகஇ கல்சியம் குறைபாடு சடுதியாக அதிகரித்துள்ளதாகவும், சுமார் 50 வீத குழந்தைகள் கல்சியம் குறைபாட்டால் பாதிக்கப்படுவதாகவும், இது ஒரு புதிதாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையெனவும் சுட்டிகாட்டினார். (அ)

# கண்ணீர்ப்புகை குண்டின் தேவை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் கண்ணீர்ப்புகை குண்டுகளுக்கான தேவை அதிகரித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் பொலிஸாரும் ஆர்ப்பாட்டக்காரர்களும் அதிகமாக கண்ணீர்ப் புகை பிரயோகத்தை மேற்கொண்டமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பொலிஸார் மட்டுமின்றி போராட்டக்காரர்களும் கண்ணீர்ப் புகை குண்டுகளை பயன்படுத்தியதால், இரு தரப்பிலும் கண்ணீர் புகைக்குண்டுகளுக்கான தேவை அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# இன்புளுவன்சா நோயாளர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15

கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் தற்போது இன்புளுவன்சா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா, குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் இந்நோய் பரவல் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

காய்ச்சல், உடல்வலி, இருமல் மற்றும் சளி போன்றவை நோய்க்கான அடிப்படை அறிகுறிகளாகும் என வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டினார்.

சிறுவர்கள் மத்தியில் இந்த நோய் எளிதில் பரவக்கூடியது. இதனால் சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் தவறாமல் கைகளை கழுவவேண்டும் என்றும் குறிப்பாக வகுப்பறைகள், மருத்துவமனைகள் மற்றும் பொது போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும்போது முக கவசத்தை அணிவது மிக முக்கியமானது என்றும் வைத்தியர் தீபால் பெரேரா கூறினார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக அளவு இயற்கைத் திரவங்கள், பரிந்துரைக்கப்பட்ட பரசிட்டமோல் குளிசை வழங்கலாம் என்று தெரிவித்த அவர், இவ்வாறானவர்களுக்கு ஓய்வும் முக்கியமானது என்றும் கூறினார். (அ)

# இன்று முதல் மீண்டும் எரிவாயு விநியோகம்

கொழும்பு, ஜூன். 15

கடந்த 7 நாட்களாக கெரவலப்பிட்டிய - தல்தியாவத்த கடலில் நங்கூரமிட்டிருந்த எரிவாயு கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

3.9 மில்லியன் அமெரிக்க டொலர் பணம் கப்பலுக்கு செலுத்தப்பட்டதாக லிட்ரோ நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

கடந்த 7 ஆம் திகதி நாட்டை வந்தடைந்த குறித்த கப்பலுக்கு தாமதக் கட்டணமாக சுமார் 2 கோடி ரூபா பணமும் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்று புதன்கிழமை முதல் மீண்டும் சந்தைக்கு எரிவாயு விநியோகிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 10 - 1962



மறைவு 11 - 06 - 2022

## சிதம்பரநாதன் கணேசரத்தினம்

யாழ். வட்டுக்கோட்டை சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கனடா ளுஉயசடிழசழரபா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் கணேசரத்தினம் அவர்கள் 11.06.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், கணேசரத்தி னம் சிதம்பரப்பிள்ளை மற்றும் கௌரியம்மா கணபதிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும்,ஜெயந்தி அவர் களின் அன்புக் கணவரும்,கோபிகா, கௌரிகா, மயூரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 19 Jun 2022 9:30 AM - 11:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Sunday, 19 Jun 2022 11:30 AM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 19 Jun 2022 1:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**மயூரிகா - மகள்** Mobile : +14372296994

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சைக்கோ,மாறன் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்-இரட்ணசிங்கம் திலகரத்தினம்-ஓய்வுநிலை விரிவுரையாளர்



09.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகாோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு